## மண்முனைப் பற்று

# பிரதேச சாகித்ய விழா
# சிறப்பு மலர் '98



பிரதேச செயலகம்

மண்முனைப் பற்று, ஆரையம்பதி



நன்றி - ஓவியத்தை வரைந்த ஓவியர் திரு.ஈ.குலறாஜ் அவர்களுக்கு

**வாழ்த்துச்செய்திகள்**

திரு.ஏ.கே.பத்மநாதன். மாவட்டச்செயலாளர், மட்டக்களப்பு i

திரு.எம்.உதயகுமார். பிரதேச செயலாளர், மண்முனைப்பற்று ii

**கட்டுரைகள்**

01 காசுபதி நடராசா

07 சி.க.பொன்னம்பலம்

13 மு.கணபதிப்பிள்ளை

23 சு.யோகன்

**கவிதை**

ஆரையூர் அமரன் 10

**சிறுகதை**

11 த.மலர்ச்செல்வன்

மற்றும்

கௌரவிக்கப்படும் கலைஞர்கள் விபரம் 20

ஊரும் பேரும் (தொகுப்பு) 26

விழா ஒன்றின் நிறைவில் 28


# மண்முனைப்பற்று

# பிரதேச சாகித்ய விழா

# சிறப்பு மலர் 1998

# பிரதேச சாகித்திய விழா - 1998

## பிரதேசகலாசாரப்பேரவை

### தலைவர்

*திரு.மா.உதயகுமார்*
*பிரதேச செயலாளர் மண்முனைப்பற்று*

### உபதலைவர்

*திரு.வெ.தவராஜா*
*உதவிப்பிரதேச செயலாளர் மண்முனைப்பற்று*

### செயலாளர்

*திரு.காசுபதி நடராஜா*
*சனசமூக உத்தியோகத்தர்*

### அங்கத்தவர்கள்

*திரு.மு.கணபதிப்பிள்ளை*
*செல்வி.செ.அமுதேஸ்வரி*
*திரு.மா.காசிப்பிள்ளை*
*திரு.அ.வினுராஜ்*
*திரு.மா.சதாசிவம்*

*திருமதி.ச.மு.தங்கம்மா*
*செல்வி.த.மதியாவர்ணம்*
*ஜனாப்.ஐ.எம்.செரீப்*
*திரு.க.சின்னத்தம்பி*
*திரு.வே.பிரதீபன்*

### மலர்க்குழு

*திரு.மா.உதயகுமார்*
*திரு.வெ.தவராஜா*
*திரு.காசுபதிநடராஜா*

### விடய எழுதுனர்

*திருமதி.கங்கேஸ்வரி புவனேந்திரராசா*

# மாவட்டச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

எமது மாவட்டம் பாரம்பரியக்கலை, கலாசார பண்பாட்டுக் கோலங்கள் நிறைந்த பிரதேசமாகும். கலையைப் பொறுத்தமட்டில் எமது பிரதேசத்திற்கு நீண்ட கால தனித்துவமான வரலாற்றுப்பின்னணியும், சில சிறப்பியல்புகளும் உண்டு. அச்சு இயந்திரங்களின் பிரயோகம் அறிமுகப் படுத்தப்படும் முன்பிருந்தே எமது மக்களின் வாழ்க்கையின் அன்றாட நிகழ்வுகளைக் குறிக்கும் கலை அம்சங்கள் செவி வழியூடாகப் பேணப்பட்டு வந்துள்ளன. பரம்பரை பரம்பரையாக பேணப்பட்டு வந்த எமது கலை வடிவங்கள் அண்மைக்காலமாக எழுத்துருப்பெற்றும், ஒளிப்பேழை மூலம் ஆவணப்படுத்தப்பட்டும் வருவது நாம் மேற்கொண்ட ஒரு காத்திரமான நடவடிக்கையாகும். இது தொடர்பாக முன்னின்று உழைத்த, உழைக்கும் அனைவரையும் இவ்வேளையில் மனதாரப் பாராட்ட விரும்புகின்றேன்.

பிரதேச செயலாளர் மட்டத்தில் அண்மைக்காலத்தில் எமது கலை, கலாசாரம் தொடர்பாக ஒரு விழிப்புணர்வுடனான செயற்பாடு நிகழ்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. அந்த வகையில் ஆரையம்பதி பிரதேச செயலகம் வெளியிடும் இரண்டாவது சாகித்ய விழா மலர் இது என்பதையிட்டுப் பெருமிதம் கொள்ளலாம்.

பிரதேச சாகித்ய விழாமூலம் மறைந்து கிடக்கும் கலைஞர்களை வெளிக்கொணர்வதும், அவர்களுக்கு ஆக்கப்பணியில் ஆர்வமூட்டுவதும், அவ்வாறான கலைஞர்களை மறக்காமல் கௌரவிப்பதும் முக்கிய நோக்கமாக இருப்பதையிட்டு நாம் மனநிறைவு கொள்ளலாம். பாடசாலை மட்டத்திலும், வெளிமட்டத்திலும் பல போட்டிகளை நடாத்தி, கலை ஆர்வம் மிக்கவர்களை வெளிக்கொணரச்செய்வதில் ஆரையம்பதி பிரதேச செயலகம் நடாத்தும் சாகித்திய விழா நிகழ்வுகள் ஒரு காத்திரமான பங்களிப்பை சமூகத்திற்கு வழங்கும் என்பதில் இரு கருத்துக்கள் இருக்க முடியாது.

ஒரு சமூகத்தின் கலை இலக்கியம், அச்சமூகத்தைப் படம் பிடித்துக்காட்டும் இரசம் பூசப்பட்ட கண்ணாடிக்குச் சமனானதாகும். அந்த வகையில் பிரதேசத்தின் மண்வாசனை மாறாமல் அங்கு வாழும் மக்களின் கலைப்பசிக்குத் தீனி போடும் ஒரு நிகழ்வாக மக்களின் நினைவுகளில் இருந்து அவை மறக்கப்படாமல் இருக்க, எதிர்காலச் சந்ததியினருக்கு அவை பாதுகாத்துக் கையளிக்கப்பட வேண்டுமென்ற குறிக்கோளுடன் சாகித்திய விழா மலர் வெளிவரும் இவ்வேளையில், இம்மலர் வெளிவர முன்னின்று உழைத்த பிரதேச செயலாளர் மற்றும் சகல ஊழியர்கள், கலைஞர்கள், ஆர்வலர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களும், பாராட்டுக்களும் உரித்தாகுக.

*இந்நிகழ்வு சிறப்பாக நடந்தேற என் நல்லாசிகள்.*

அ.கி.பத்மநாதன்
அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளரும்
கச்சேரி, மட்டக்களப்பு.

# பிரதேச செயலாளரின் செய்தி

கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்கள் வேரூன்றியுள்ள கிராமியச் சூழல் கொண்டு அமைந்துள்ளதான மண்முனைப்பற்று பிரதேசத்தில் கலை, கலாசார பண்பாட்டு அம்சங்களை வெளிக்கொணரக் கூடிய வகையில் மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தினால் வருடாந்தம் செயற்படுத்தி வருகின்ற பிரதேச சாகித்திய விழாவினை அடியொற்றியதாக, இவ்வாண்டும் வெளிவரும் சிறப்பு மலருக்கு இச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தொன்மைமிகு நாட்டுக்கூத்து. வசந்தன், கும்மி, கரகம், மகுடி என தமிழர் கலை இலக்கிய வடிவங்களும், களிகம்பு, கோலாட்டம் போன்ற முஸ்லீம்களின் கலை இலக்கிய வடிவங்களும் ஒன்றிணைந்து ஆரோக்கியமிகு கலை, இலக்கிய களமாக எமது பிரதேசம் மிளிர்கின்றது.

இவ்வாண்டும் இவ்வாறான முயற்சிகளை மேலும் வெளிக் கொணர்ந்து, இம் முயற்சிகளுக்கு புத்துணர்ச்சியளிக்க கலை இலக்கியப் போட்டிகள் நடாத்துவதற்கும், கலைஞர்களை கௌரவிப்பதற்கும் சாகித்திய விழாவினை நடாத்துவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இம்முயற்சிகளுக்கு எமக்கு எல்லா வகையிலும், ஒத்துழைத்த சகலருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்ற அதேவேளை, இம்முயற்சிகள் வெற்றிபெற - உழைத்த எமது கலாசார பேரவை உறுப்பினர்களுக்கும், அலுவலக உத்தியோகத்தர்கள் யாவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன், அனைத்து - முயற்சிகளும் சிறப்புறப் பிரார்த்திக்கின்றேன்.

மா. உதயகுமார்
பிரதேச செயலாளர்
மண்முனைப்பற்று
98.09.09.

# உங்களுடன் சற்று நேரம்

இரண்டாவது மலரையும் வெளியிட வாய்ப்புக் கிடைத்ததில் மகிழ்ச்சியடைகிறோம். இந்நிகழ்ச்சி ஏற்பட துணைநின்ற அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள் கூறுகிறோம்.

மட்டக்களப்புத் தொன்மைச் சிறப்புடையது, தனித்துவமான பண்புகளையும், கலாச்சாரத்தையும், ஆவணங்களையும் தன்னகத்தே கொண்டது அவற்றினுடைய முழுமையான ஆய்வுகள் செய்யப்பட வேண்டும் என்பதே எமதவா.

பிரதேச மட்ட சாகித்திய விழாக்களின் போது வெளிவரும் வெளியீடுகள் அவ்வப்பிரதேச ஆய்வாக அமையுமானால் அவற்றினுடைய தொகுப்பு நீண்ட காலத்தில் மட்டக்களப்புத் தொடர்பான முழுமையான ஆய்வாக அமையலாம் என்பது எமது நம்பிக்கை.

இம்மலரையும் எம்மால் முடிந்தவரை மட்டக்களப்பு மாவட்டம், மண்முனைப் பிரதேசம் சார்ந்த ஆய்வு நூலாகக் கொண்டுவருவதில் முனைப்பாக இருக்கின்றோம். ஆனால் ஆய்வாளர்களைக் கண்டுபிடிப்பதிலும் கண்டுபிடித்தவர்களுக்குப் பின்னால் அலைவதிலுமேயே அதிகப்படியான நாட்களைச்செலவிட வேண்டியுள்ளது. இருப்பினும் எம்பிரதேச மக்கள், இலக்கிய ஆர்வலர்கள், பொதுநலவிரும்பிகள் தரும் ஆதரவும் ஒத்துழைப்பும் எமது முயற்சிக்கு மேலூக்கத்தை தருக்கின்றது.

மட்டக்களப்பில் அம்மன் வழிபாடு வாழ்வோடு ஒன்றிப்போன, வாழ்வுமயமான வழிபாட்டு முறையாகவுள்ளது. கண்ணகி, பேச்சி, முத்துமாரி....என பல வடிவங்களாக அம்மனை மக்கள் தரிசிக்கின்றனர். எனவே இப்பிரதேச அம்மன் வழிபாடு தொடர்பாக ஒரு ஆய்வு இவ்வாண்டு செய்ய எண்ணியிருந்தோம். இன்றுவரை முயன்றும் முயற்சி தோல்வியடைந்துள்ளது என்பதை தெரிவித்தே ஆகவேண்டும். இருந்தாலும் அம்முயற்சியின் அடியெடுப்பில் இரண்டு கட்டுரைகள் மட்டும் இம்மலரில் இடம்பிடித்துள்ளது. ஏனையவை எமது பிரதேசம் சேர்ந்த ஆய்வு, தொகுப்புக் கட்டுரைகளாக அமைந்துள்ளன.

மீண்டும் தொடர்வோம் எனும் நம்பிக்கையுடன்

வெ.தவராஜா,
உதவி பிரதேச செயலாளர்,
மலர்க்குழு சார்பில்.

......அழகிய ஒப்செற் அச்சில் மலர்ந்துள்ள மலர் கனகச்சிதமாக மலர்ந்துள்ளது. சிறிய மலராகவிருப்பினும் ஆழமாகவுள்ளது.

பயணி (இலக்கியசாலை பகுதி விடிவானம்) 1-14 ஒக்டோபர் 1997.

மிகச் சிறப்பான காத்திரமான மலர் கிடைக்கப் பெற்றமைக்கு எனது நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜி.கிருஷ்ணமூர்த்தி, தலைமைச் செயலாளர்,
வடக்குக்கிழக்கு மாகாணம், திருகோணமலை.
06.08.1998.

.....தங்களது பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட பிரதேச சாகித்திய விழாவையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர் கிடைக்கப்பெற்றுள்ளதென தங்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றேன்.
தங்கள் பிரதேசத்தில் பாரம்பரியம் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு மலரை வெளியிட்டது பாராட்டப்பட வேண்டியதே.

ச.முரளிதரன், பிரதேச செயலாளர்,
கோறளைப்பற்று வடக்கு, வாகரை.

.......மட்டக்களப்புப் பிரதேச அரசாங்க நிறுவனங்களால் வெளியிடப்படும் சஞ்சிகைகளில் வித்தியாசமாக வெளிவந்துள்ளது. அனேகமாக மட்டக்களப்பு சஞ்சிகைகளின் அட்டையில் இடம் பிடிக்கும் நீராரமகளிர் தவிர்க்கப்பட்டு மரபுக்கூத்தின் அணிகலன் இடம்பெற்றிருப்பது மாறுபட்டதாக அமைந்துள்ளது.

மண்முனைப்பற்றின் பாரம்பரியம் பண்பாடுபற்றிய ஆய்வு நூலாகவும் சுயத்தின் தேடலாகவும் இம்மலர் வெளிவந்துள்ளது மாற்றமொன்று நிகழ்ந்துள்ளதையே காட்டி நிற்கின்றது.


சு.யோகன் கிழக்குப் பல்கலைக்கழகம்
சரிநிகர் புரட்டாதி 1997.

"ஒரு பிரதேச செயலகத்தினால் வெளியிடப்படும் இலக்கிய மலரொன்று எவ்வாறு வெளிவர வேண்டுமோ அவ்வாறே மண்முனைப்பற்று பிரதேச சாகித்ய விழா மலர் வெளி வந்துள்ளது பாராட்டுகிறேன்.

அரசாங்க நிறுவனம் ஒன்று தனது நிகழ்ச்சி நிரலுக்கான திட்டத்தைச் செய்யாமல் முழு ஈடுபாட்டுடன் செயற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

மட்டக்களப்பின் பாரம்பரியம் இன்னும் அகழ்ந்து பெறவேண்டியுள்ளது. இம்மலர் அதற்கு ஒரு எடுத்துக்காட்டு".

பேராசிரியர் கா.சிவத்தம்பி
பல்கலைக்கழக விடுதியில் (பார் வீதி, மட்டக்களப்பு) ஏற்பட்ட சந்திப்பின்போது.



## கடந்த ஆண்டில் உங்கள் கணிப்பு

# மண்முனைப் பிரதேசத்தில் பெண் தெய்வ வழிபாடு

காசுபதி நடராஜா (முதுநிலை சனசமூக உத்தியோகத்தர்)



பொது:

"சிந்துவெளி அறைகூவும் திராவிட நாகரிகத்திற்கு மட்டுமன்றி உலகின் பழம் பெரும் எகிப்து, சுமேர் போன்ற இடங்களில் ஒருகால் நிகழ்வுற்ற நாகரிகங்கட்கும்.

"நாகரிகம் ஆரம்பித்த நிலையில் அன்னைத் தெய்வவழிபாடே முக்கியத்தவம் பெற்றுத்திகழ்ந்தது அதைஅடுத்தே ஆண்தெய்வங்கள் படிப்படியாக அவ்விடத்தை அடைந்தன."-என்னும் கூற்று பொருந்துவதாம்.

கண்ணுக்குப் புலனாகா அம்சங்கள் அடங்கியதாகவும், தெய்வங்களிலும் பார்க்க ஆண்மீகத்தன்மை வாய்ந்தனவாகவும் பெண் தேவதைகட்கு இயல்புகள் அமைந்தனவென 'மக்ஸ்முல்லர்' கூறுவதனையும் நாம் மனதில் கொண்டால் அன்னை தெய்வ வழிபாட்டின் முக்கியத்துவத்தை உணர முடியும். சமூகத்தில் பெண் வகிக்கும் இடம், சமூக அமைப்பின் தன்மை என்பதன் அடியாக பெண்தேவதைகளே தெய்வங்களுள் உயர் இடத்தை வகித்தன. விவசாய அடிப்படையில் உயிரோம்பும் ஒரு சமுதாய நிலை பெண் தெய்வ வழிபாட்டின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் துணை நின்றதெனலாம். "பண்டை மக்கள் தமக்கு வேண்டிய எல்லா உணவுப் பொருள்களையும் உதவி வந்த தரையைப் பெண் தெய்வமாக வழிபட்டு வந்தனர்" என்னும் கருத்தை கலாநிதி. மா.இராசமாணிக்கனார் கூறிப்போவர்.

இன்று நமது வழிபாட்டில் வெண்மை, அமைதி, கருணை, சாந்தம் என்னும் பண்புகள் பொருந்தப்பெற்றதாய் அம்மன், சரஸ்வதி, பார்வதி, கௌரி போன்ற உருவிலும் கருமை, அச்சம், மறம் என்னும் பண்புகளினடியாக காளி, துர்க்கை போன்ற உருவிலும் அன்னை தெய்வத்தை அமைப்பது, மேற் குறிப்பிட்ட தரைப் பெண்ணிடம் கண்ட பண்புகளோடு ஒப்பிடற்குரியதாம். 'தரை அன்னையின் வழிபாடே பிற்காலத்தில் பொதுப்படையான அன்னை தெய்வ வழிபாடாக மாற்றமடைந்ததென்பர்'. 'அன்னைதெய்வம் ஆண்துணைத் தெய்வங்களுடன், பாம்புடன் தொடர்பாக வணங்கப்படுதலும் உண்டு. எகிப்து, சுமேர் போன்ற பழம் நாகரிகங்களிலும் இப் பண்பினைக் காணலாம்.' - 1

"உலகில் ஜீவராசிகளின் தோற்றம், அவற்றின் இயக்கம், அவற்றுக்கிடையேயான உறவு நிலைப்பாடு, அவை ஒன்றன் மீது மற்றது கொண்டிருக்கும் சார்புநிலை என்பவற்றைத் தீர்மானிக்கின்ற ஒரேயொரு கருப்பொருளாக இப்பெண்மைக் கோட்பாடு இருந்ததினாற் போலும் அம் மனிதனுடைய வழிபாட்டு மரபிலே பெண் தெய்வ வழிபாட்டுமுறையானது மிகவும் அனாதியானதாக இருந்து வருகிறது". - 2

களம்:

மட்டக்களப்பின் குடிப்பரம்பல் பற்றிய ஓர் எழுத்தாவணமாக உள்ளது மட்டக்களப்பு மான்மியம் இதன் கூற்றில் மண்முனைப்பற்று வரலாற்று ரீதியாக உன்னத இடத்தைப் பெற்றிருந்தது அறியவருகிறது. இடப் பெயர்வும், குடிப்பரம்பலும் இப்பிதேசத்தில் ஆதி வணக்கமுறைகள் தோன்றக்காரணமாயிற்று. இதனைக் கருத்தில் கொண்டோமாகில் பெண்தெய்வ வழிபாட்டு

முறையானது இங்கு அனாதியாய் தோன்றி வளர்ந்து இன்றையப் படிநிலையை அடைந்தது என்று கொள்ளல் பொருந்தும்.

எனினும் அண்மைக்காலத்தில் வேரைத்தேடும் பணியில் ஏற்பட்ட தீவிரம் 1957 வெள்ளப்பெருக்கு, 1978 சூறாவளி முன்வந்திருக்குமாயின் அரிய தகவல்கள் பலவற்றை நாம் பெற்றிருக்க வாய்ப்பிருந்திருக்கும். ஆயினும் இன்றுள்ள நிலையிலாயினும் இருப்பை ஆவணப்படுத்தல் நமது தவிர்க்க முடியாக் கடனாகும்.

நிலை:

இப்பிரதேசத்தில் காளியம்மன், கண்ணகியம்மன், பேச்சியம்மன், நாகபூசணியம்மன் ஆகிய தெய்வங்களுக்குத் தனிக்கோயில்களாக 18 திருத்தலங்கள் உள்ளன.

இவற்றைவிட சிவன், விஷ்னு, பிள்ளையார், முருகன், வைரவர் முதலாம் தெய்வங்களின் பரிவார மூர்த்தங்களாக அம்மன் கோயில் கொண்டுள்ளாள்.

கண்ணகி:

சிலப்பதிகாரத் தலைவி, காவிரிப்பூம் பட்டினத்திலே மாநாயகன் என்னும் வணிகன் மகளாகிக் கோவலனை மணந்து ஊழ்வினையாலே, கணவனுடன் மதுரையை அடைந்து, கணவனைக் கள்வனென்று கொல்வித்த பாண்டியனுடன் வழக்குரைத்தவள். பாண்டியன் உண்மையுணர்ந்து இறந்தவுடன் மதுரையை எரித்து, மதுராபதியின் கட்டளைப்படி வைகைக் கரைவழியே மேற்கே சென்று, திருச்செங்குன்றில், இறந்த பதினான்காம்நாள் தெய்வ வடிவத்தோடு தோன்றிய கணவனுடன் வானுலகு சென்றவள்.

சேரன் செங்குட்டுவனால் இமையமலையிலிருந்து கொண்டு வந்த கல்லில் தெய்வமாக வழிபடப் பெற்றவள். தமிழ் நாடும், உலகமும் போற்றும் பத்தினித் தெய்வமானவள் என்பது காவியத்தின் கதை. சங்ககாலத்தவள் (புறம் 143:7)" - 3

1. ஸ்ரீ அனைவாவிக் கண்ணகி அம்மன் கோவில் - கிரான்குளம்

இது அண்மைக்காலத்தில் உருவானது. வருடந்தோறும் வைகாசிப்பூரணையில் திருக்குளிர்த்தியும் அதற்குமுதல் இரு நாட்கள் சடங்கும் நடைபெறும். திருக்குளிர்த்தி முடிந்து எட்டாம் நாள் குளிர்த்தி சடங்கும் நடைபெறும்.

2. கண்ணகை அம்மன் கோவில், பிரதான வீதி, புதுக்குடியிருப்பு

கண்ணகி அம்மனுக்கு வைகாசிப் பூரணைத் திருக்குளிர்த்தியுடன் முதல் ஆறுதினங்களுக்கு இருதியாலச் சடங்குகள் நடைபெற்று, அடுத்தநாள் இரவு வைரவர் சடங்குடன் நிறைவு பெறும். வருடந்தோறும் தைப்பொங்கல் நாளன்று இரவு பொங்கல் பூசை நடைபெறும். இங்கு குடிமரபின் பொறுப்பில் சடங்குகள் நடைபெறுகிறது. இது உலக நாச்சியார் காலத்துக் கோயில் என்று கூறப்படுகிறது.

3. ஸ்ரீ கண்ணகை அம்மன் கோயில் - தாளங்குடா

''இந்தியாவில் கண்ணகி வழிபாடு ஆரம்பிக்கப்பட்ட காலத்துக் கோவில் இது. பழமைவாய்ந்த கட்டுப்பாடுகளுக்கமைய இன்றும் பூசைகள் நடைபெற்று வருகின்றன. பரிவாரமூர்த்திகள் நாகதம்பிரான், வைரவர். வருடா வருடம் வைகாசித் திங்களுக்கு 7 நாட்களுக்கு முன் திருவிழா ஆரம்பமாகி குளிர்த்தியுடன் முடிவடையும். உற்சவகாலங்களில் இரு காலப் பூசைகள் நடைபெறும்."

4. ஸ்ரீ கண்ணகி அம்மன் கோவில் - ஆரையம்பதி - 3

இதுவும் ஒரு பழம் பெருங்கோவில். கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடு பரவிய இடங்களைப்பற்றிய ஊர் சுற்றுக் காவியம் வருமாறு.

பட்டிநகர் தம்பிலுவில் வீரமுனை காரைநகர்
பவுசுபெறு கல்முனை கல்லாறெரிவில்மகிழூர்
செட்டிபாளையம் புதுக்குடியிருப்பு
செல்வமுறு மகிழடித்தீவு முதலைக்குடா
அட்டதிக்கும் புகழும் வந்தாறுமூலை நகர்
ஆங்காங்கு நித்திய கலியாணியாய் அமரும்
மட்டவிழ் பூங்குழல் மண்முனைக் கண்ணகையை
மனதில் நினைக்க வினைமாறி ஓடிடுமே.

" இவை அக்காலத்திலே மிகவும் செல்வச் செழிப்போடு திகழ்ந்த பேரூர்களாகும். இவ்வூர்களில் பெரும்பாலானவை அதே பெயர்களுடன் அழைக்கப் பட்டாலும் சில பெயர்கள் மாற்றமடைந்துள்ளன. பட்டிநகர், காரைநகர், வீரநகர் என்பன முறையே தம்பட்டை, காரைதீவு, வீரமுனை என அழைக்கப்படுகின்றன. ஆரையம்பதியில் மிகப்பழைய காலந் தொடக்கம் கண்ணகி கோவில் இருந்து வருவதால் மண்முனை என்பது ஆரையம்பதியாக இருக்கலாம்." - 5

வருடந்தோறும் வைகாசி பூரணைக்கு முந்திய 7 நாட்கள் சடங்கும் பூரணையன்று திருக்குளிர்த்தியும் நடைபெறும். சடங்கு ஆரம்பமாவதற்கு முதலிரவு கந்தசாமி கோயிலிருந்து அம்மன் எழுந்தருளப் பண்ணும் நிகழ்வும்,

குளிர்த்தி முடிந்த அடுத்த நாளிரவு மீண்டும் அக்கோயிலைச் சென்றடையும் நிகழ்வும் இடம்பெறும். இங்கும் பத்ததி முறைப்படி 'கட்டாடி' மார்களால் பூசை நடைபெறும்.

5. ஸ்ரீ கண்ணகியம்மன் - பரமநயினார் ஆலயம் - ஆரையம்பதி 1

ஸ்ரீ பரமநயினார் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடக்கும் வரை வைகாசிப் பூரணைக்கு முந்திய 7 தினங்களும் சடங்கு நடந்து திருக்குளிர்த்தி வைபவத்துடன் நிறைவுற்றது. இப்போது "கண்ணகி அம்மாளுக்கு திரு விழா, சடங்கு, திருமுழுக்கு ஆகியன செய்யப்பட்டு குளிர்த்தியும் நடைபெற்று வருகிறது. - 6

காளி :

"தெய்வ வழிபாட்டிலேயே தேவி வழிபாடு மிகப் பழமையானது என்பர். பழைய உலகத்தின் முக்கிய தேவையான தேவி (சக்தி) ரிக் வேதகாலத்திற்கும் முற்பட்ட தெய்வம் என்பது மஹறன்.ஜோ.தடோ (மொகஞ்சதாரோ) என்னும் இடத்தை தொல்பொருள் இலாகாவினர் தோண்டிப் பார்த்தபோது கிடைத்த மிகப் பழைய நாகரிகச் சின்னங்களினின்றும் தெரியவருகிறது. தமிழர் நாகரிகத்துடன் அந்த நாகரிகம் தொடர்புடையதென்று கருதுவோருமுண்டு.

அந்த நாகரிகத்திலேயே அம்பாதேவியின் (Mother Goddess) வழிபாடு பிரபலமாக இருந்தது. அந்த அன்னை வழிபாடு பாரசீகத்திலிருந்து கிரீஸ்வரை பரவியிருந்ததாம். அம்பா வழிபாடாகிய அம்மா வழிபாட்டிலிருந்து காளி வழிபாடு தோன்றியிருக்க வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் யூகம். அம்பாதேவிக்கு வாகனம் சிங்கம்தான். அவளும் போரின் அதி தேவதைதான்: வெற்றித் தெய்வந்தான்."- 7

1. ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவில் - கிரான்குளம்

வருடந்தோறும் புரட்டாதி மாதத்தில் வரும் அமாவசைக்கு முந்திய மூன்று தினங்களில் சடங்கு நடைபெறும். அமாவாசைத தினத்தன்று தீப்பாய்தல் நடைபெறும். பின் எட்டாம் நாளில் நிறைவு சடங்கு ஒன்று நடத்தப்பட்டு தீக்குழி மூடப்படும். வெள்ளிக்கிழமை தோறும் பூசையும் நடைபெறும்.

2. காளிகோவில் - வேடர்குடியிருப்பு

புரட்டாதி மாதத்தில் பூரணைக்கு முன் மூன்று தினங்கள் சடங்கு நடைபெற்று பூரணையில் நிறைவுற்று கடலில் கும்பம் சொரியப்படும்.

3. ஸ்ரீ வீரம்மாகாளியம்மன் கோவில் - சேனைத்தெரு - வெம்பு

ஆவணி மாதத்துப் பூரணைக்கு முந்திய ஐந்து நாட்களுக்குச் சடங்கு நடைபெற்று பூரணையில் கும்பம் சொரியப்படும்.

4. காளிகோவில் - மண்முனை

ஆவணி மாதத்துப் பூரணைக்கு முந்திய மூன்று நாட்களுக்கு இச் சடங்கு நடைபெற்று கும்பம் சொரியப்படும்.

5. ஸ்ரீ பத்திர காளியம்மன் ஆலயம் - செல்வாநகர் கிழக்கு

ஆவணிப் பூரணைக்கு ஐந்து நாட்கள் முன்பு தொடங்கி பூரணையில் நிறைவுறும். இருகாலப் பூசையுடன ஒன்பது பூசைகள் நிகழும் கடலில் கும்பம் சொரிவதுடன் கதவு அடைக்கப்படும்.

6. ஸ்ரீ வட பத்திரகாளியம்மன் ஆலயம் - ஆரையம்பதி - 2

ஆடிமாத அமாவாசைக்குமுந்திய 5 நாட்கள் சடங்கு நடைபெற்று அமாவாசைஉதயத்தில் தீ மிதிப்பு வைபவத்துடன் நிறைவுறும்.

7. காளிகோயில் - ஆரையம்பதி மத்தி

ஆடி மாதப் பூரணைக்கு முந்திய ஐந்து நாட்சடங்கு நடைபெற்று பூரணையன்று அதிகாலை சூரியோதயத்தில் தீ மிதிப்பு வைபவத்துடன் நிறைவுபெறும். முன்பு பலிச் சடங்கு நடைபெற்று பின்பு தீமிதித்தலாக மாறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மாரி :

''மிகவும் சாதாரணமாக நாடெங்கும் வழிபாடுபெறும் தெய்வம் மாரி. 'மாரி' மழை என்று பொருள்படும். வெப்பத்தைத் தணிவித்து வெப்பநோய்களாகிய அம்மை முதலியவற்றைத் தீர்த்து நாடு தழைக்கச் செய்வதும், மாடு பிழைக்கச் செய்வதும் மக்களை மழைபோல் காப்பவள் இந்தத் தெய்வம் என்று மக்கள் போற்றுவர்.

சிலப்பதிகாரத்திலே பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்கு பல நாடுகளில் கோயிலமைத்து விழாவோடு சாந்தி செய்தனர் என்றும் அதனால் மழைவறங் கூர்ந்து வறுமை எய்தி வெப்புநோயும் குருவும் தொடர

வருந்தியிருந்த நாடு மலிய மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கியது என்றும் குறிக்கப்படுகிறது. அக்காலத்தில் உண்டான கண்ணகி கோயில்கள் சிலவும் நாளடைவில் மாரியம்மன் கோயில்களாக மாறிப் போயிருக்கலாம்.

'பிருகு' முனிவரின் மனைவியாக இருந்த நாகவல்லி முனிவருடைய சாபத்தினால் 'மாறி' யிருந்தபோது சலவைத் தொழிலாளிப் பெண் காப்பாற்றி வந்தாள். இதனால் இவருக்கு 'உப்பை' என்னும் பெயருமுண்டு. உப்பை என்பது சலவைத் தொழிலுக்காக வெள்ளாவி வைக்கும் உலைக்கும், வெள்ளாவி வைப்பதற்கும் பெயராக கன்னடம், தெலுங்கு, துளவம் ஆகிய திராவிட மொழிகளில் சாதாரணமாக வழங்கி வருகிறது. இந்தக் காரணத்தினால்தான் சலவைத் தொழிலாளர் சில இடங்களில் பூசாரிகளாகவும் கரகம் ஆடுபவர்களாகவும் இருக்கின்றனர்.

1. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - கிரான்குளம்

"இக் கோயிலில் 7 தினங்களுக்குப் பூசை நடைபெற்று குளிர்த்தியுடன் ஆனி மாதப் பூரணையில் வருடாந்த உற்சவம் முடிவுறும். - 9

2. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - தாளங்குடா

ஆனிப் பூரணைக்கு முந்திய 7 நாட்கள் சடங்கு நடைபெறும். உற்சவ காலத்தில் இருகாலப் பூசைகள் இடம்பெறும்.

3. மகாமாரியம்மன் கோவில் - மண்முனை

ஆடிப்பூரம் சக்தி வழிபாட்டுத்தினம் தமிழகத்தில் இது சிறப்பாகக் கொண்டாடப்படும். இதனை அடியொற்றிப்போலும் இக்கோயிலும் ஆடிப்பூரத்திற்கு முதல் இரு நாட்கள் மூன்று காலப் பூசைகள் நடைபெற்று பூர நட்சத்திரத்தில் கும்பம் சொரியப்படும்.

4 ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - செங்குந்தர் வீதி, ஆரையம்பதி

"மூலமூர்த்தி - முத்து மாரியம்மாள். பரிவார மூர்த்திகள் - வைரவர், வீரபத்திரர், பேச்சியம்மன் ஆகியோர். ஆலயம் பற்றிய ஓலைச் சுவடிகள் உள. இங்கு வாராந்தப் பூசையுடன் கும்பம் வைத்தல், அம்மன் தேர், கப்பல் திருவிழா, குளிர்த்தி போன்றவைகளும் விசேடமாக மாரியம்மன் பெருமையைச் சித்தரிக்கும் விழாக்களும் பலவருடகாலமாக நடைபெற்று வருகின்றன." - 10

5. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - வம்மிக்கேணி ஆரையம்பதி

"மூலமூர்த்தி - மாரியம்பாள், பரிவாரமூர்த்திகள் - வீரபத்திரர், வைரவர். வருடமொருமுறை ஆனி மாதப் பூரணைக்கு முடிவடையுமாறு ஐந்து நாட் பூசை நடைபெற்று வருகிறது." - 11

பேச்சி :

"சங்க இலக்கியங்களில் குறிப்பாகப் புறநானூற்றில் பேய்மகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. பேய்மகள் பிணம் தின்பவளாக புறநானூறு கூறும் 'பேய்ச்சி' என்ற சொல் வழக்காறு பிற்காலத்தில் தோற்றம் பெற்று பேய்ச்சி பிணம் தின்பவளாகவும், குடலைமாலையாகப் போடுபவளாகவும் சுடலையில் ஆடுபவளாகவும், கொடூரமானவளாகக் கூறப்படுகின்றாள். தமிழ் நாட்டில் திருநெல்வேலியில் கழுகு மலைக்கு அணித்தாயுள்ள பேய்ச்சி கோவில் ஒன்றில் பிள்ளை ஒன்றைக் கடித்த வண்ணம் பேய்ச்சி விக்கிரகம் அமைந்திருப்பதை கலாநிதி க. கைலாசபதி சுட்டிக் காட்டுகின்றார்.

இங்கு கல்லடி உப்போடையில் அமைந்துள்ள பேய்ச்சி விக்கிரகம் ஒரு பிள்ளையைக் காலால் மிதித்து மற்றொரு பிள்ளையை மடியில் பிடித்து வைத்திருப்பதாக அமைந்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இப்படியான பேய்ச்சியம்மன் வழிபாடு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எங்கேனும் இருப்பதாகத் தெரியவில்லை.

மட்டக்களப்பில் பேய்ச்சியம்மன், சுடலைப் பேய்ச்சி, பள்ளயப் பேய்ச்சி, ஆகாசப் பேய்ச்சி என மூன்று வகையாகக் கூறப்படுகின்றன. தனிப்பட்ட கோயில்களில் எழுந்தருளியிருப்பவரை சுடலைப் பேய்ச்சியாகவும் மாரியம்மன் கோயில்களோடு தொடர்புபட்டிருப்பவளை பள்ளயப் பேய்ச்சியாகவும் காண முடிகிறது. ஆகாசப் பேய்ச்சி என்பவர் அருவமானவள் எனக் கருதப்படுகின்றது. சுடலைப் பேய்ச்சிக்கு மிருகபலி கொடுப்பது வழக்கமாக இருந்தாலும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பகாலமிருந்தே அப்பலியிடும் வழக்கம் இங்கு ஒழிக்கப்பட்டதெனலாம். பள்ளயப் பேய்ச்சிக்கு தண்ணீர்ச் சோற்றுப் பள்ளயம் கொடுத்து மகிழ்விப்பர். பள்ளயம் என்பது உணவு வேள்வி எனலாம். வைகறையில் தண்ணீர் சோறு, தயிர், கூழ், பழங்கள், வெல்லம், பலகாரவகை முதலியவற்றைப் படையல் செய்து வழிபடுதல் தண்ணீர் சோற்றுப் பள்ளயமாகும். காலப் போக்கில் சுடலைப் பேய்ச்சி, பள்ளயப் பேய்ச்சியெல்லாம் ஒன்றாகக் கலந்த மாதிரியில் படையல் கொடுக்கும் வழக்காறு இங்கு தோற்றம் பெறலாயிற்று.

இங்கு பேய்ச்சியம்மனை நோய்பீடைகள் போக்குபவளாக மக்கள் கருதுகின்றனர். குறிப்பாக வயிற்று நோய்களுக்கும், குழந்தை நோய்களுக்கும் பேய்ச்சியம்மன் திருவருளை நாடி பக்தர்கள் செல்வதைக் காணமுடிகிறது." - 12

1. பேச்சியம்மன் கோவில் - ஆரையம்பதி - 2

ஆடி மாதத்தில்வரும் பூரணைக்கு முந்திய வெள்ளிக்கிழமை பிற்பகலில் தீமிதிப்பு வைபவமும் அடுத்த நாட்காலை பள்ளயமும் நடைபெற்று கடலில் கும்பம் சொரியப்படும். எட்டு நாட்கள் சடங்கு நடைபெறும் இங்குள்ள பேய்ச்சியம்மன் விஷ்னு சக்தியாக வழிபாடாற்றப்படுகிறது. "மூலமூர்த்தி பேய்ச்சியம்மன். இருகாலப் பூசை நடைபெறுகிறது." - 13

நாகபூசணி

யாழ் . நயினாதீவு நாகபூசணி அம்மன் 64 சக்தி பீடங்களுள் ஒன்று. ஐந்து தலை நாகம் படம் எடுத்தாட நடுவிலே சிவலிங்கம் உள்ள தோற்றமே மூல மூர்த்தியாகும்.

மட்டக்களப்பில் பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயம் மிகவும் புகழ் பெற்றது. இது பற்றிய கர்ண பரம்பரைக்கதைகள் இங்கு பிரபலமானவை.

"மேலோட்டமாகப் பார்க்குமிடத்து பாமர வழக்கிலுள்ள இக்கதை ஒரு புனைக்கதை போலவே தோன்றும். நாகம்மையோடு நாகம் பிறந்தது என்பதும், நாகம்மை காட்டெருமையின் கொம்புகளைப் பிடித்து அதனை அடக்கினாள் என்பதும் வெறுங் கற்பனை கதைகளாகும். சமுதாய நிறுவனங்களையும், வழிபாட்டு நிலையங்களின் உற்பத்தியினையும் அற்புதங்களின் அடிப்படையிலே விளக்கும் மரபு எமது பாரம்பரியத்திற்கு அன்னியமானதன்று. அனந்தனையும் சேடனையும் பற்றிய கதைகளே அளவிலாதன என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

மண்முனை காலிங்க குடியினைச் சேர்ந்த நாகம்மை படையாண்ட குளத்துக்கண்மையிலுள்ள கடுக்காமுனையிலே குடிபுகுந்தமை, மகிழடித்தீவில் கண்ணகியம்மன் கோவில் உற்பத்தியானமை, பண்டாரியாவெளியில் நாகதம்பிரான் கோயில் தோன்றியமை என்பனவையே இக் கதையின் பிரதான அம்சங்களாகும். தாய்வழி மரபினரான காலிங்ககுடியினரின் பரம்பலோடு நாகதம்பிரான் வழிபாடும்: கண்ணகியம்மன் வழிபாடும் தொடர்பு கொண்டிருந்தன என்பதையும் இக்கதை உணர்த்துகின்றது.

நாகம் பற்றிய கதை நாகதம்பிரான் கோயிலின் உற்பத்தியானது என்று கருதலாம். காலிங்காகுடியினரின் இறையினரான 'கொம்பிக் கிழவி' வயிற்றுவார் என்போரின் குலப்பெயரை விளக்கு முகமாக எழுந்ததே நாகம்மை காட்டெருமையின் கொம்புகளைப்பிடித்து அதனை அடக்கினாள் என்ற ஐதீகமாகும். காலிங்கர் குடியினைச் சேர்ந்த நாகம்மை வயிற்றுவார் வழியினர் மண்முனையிலிருந்து சென்று பண்டாரியாவெளியில் முன்னொரு காலத்தில் குடிபுகுந்த வரலாற்றினைக் குறிப்பதாகவும் இக்கதை கொள்ளத்தக்கது. அது ஆராய்தற்குரியது." - 14

நாகபூசணியம்மன் கோவில் - சேனைத் தெரு, வெம்பு

நாகதம்பிரான் ஆலயமாகத் தோற்றம் பெற்று நாகபூசணியம்மன் கோயிலாக வழிபாடு நிகழ்கிறது. பொங்கல், பூசை முதலியன ஒழுங்கு முறையில் நடக்கின்றது.

சமூகநிகழ்வு:

"தாய்மைக்கே தனியுரிமை கொடுத்துப்பேணும் சமயம் இந்து மதம். இதையொட்டியே 'சாக்தம்'என்று ஒரு பிரிவு ஏற்பட்டது. சைவம் அம்மை அப்பனாகப் பேசி நிற்க 'சாக்தம்' எல்லாம் அம்மையின் உறவாகவே இணைந்து விடுகிறது." 15 அம்மை வழியே மட்டக்களப்பு மரபு அதனை அம்மன் சடங்குகளில் நிறைவாகக் காணலாம்.

"இந்தச்சடங்கு என்பது வெறுமனே ஒரு வழிபாடு மட்டுமல்ல. ஊரில் உள்ள அத்தனை மக்களும் ஒன்று கூடி ஆசார சீலத்துடன் தெய்வசக்தியை ஆராதனை செய்யும் ஒரு நிகழ்வாகும். வருஷத்தில் ஒருமுறை இந்த உற்சவம் நிகழ்த்தாலும் ஆண்டு முழுவதும் அம்மனின் அருள் தங்கள் கிராமத்தையும், மக்களையும் அரவணைத்துச் செல்வதாகவே மக்கள் இன்றும் நம்புகின்றனர். அதில் உண்மை இல்லாமலும் இல்லை. குளிர்த்தி நிகழ்வை நேரில் பார்ப்பவர்கள் மக்களின் பக்திப் பரவசத்தைக் கண்ணாரக்காணலாம் "16 குறிப்பாக அம்மனிடம் அருள் வேண்டி சென்ற பெண்கள் தாங்களும் அம்மனாகவே மாறி மற்றவர்களுக்கு அருள் கூறுபவர்களாக மாறும் நிலை இவ்வழிபாட்டிலேதான் உள்ளது. மட்டக்களப்பு மக்களின் வாழ்வில் இது இரண்டறக் கலந்துவிட்ட ஒன்று.

சக்கரையமுது

கண்ணகை அம்மன் சடங்கு நடந்து முடிந்ததும் மரபு வழி வீடுகளில் விசேடமாக மாரியம்மனுக்கும், காவல் தெய்வமான வைரவருக்கும் சடங்கு செய்யும் வழக்கம் இங்கு பிரபலமாக உள்ளது.
பெரும்பாலும் வைகாசி, ஆனி, ஆவணி மாதங்களில் வெள்ளி, செவ்வாய் தினங்களில், பகலில் அனுமானுக்குச் சக்கரை அமுதும் இரவில் வைரவருக்கு ரொட்டி படைத்தும், அதிகாலையில், தண்ணிச் சோறு படைத்தும் பள்ளயமும் நடத்துவர்.

சிறுமிகளை கன்னியராக வைத்து அவர்களுக்கு நீர் கொண்டு கால் கழுவி வேப்பிலை வழங்கி சக்கரை அமுதின் போது பொங்கலும் பள்ளையத்தில் தண்ணீச் சோற்று முடிப்பும் வழங்கி வீட்டு வாசலில் வைத்து 'சுகம் தந்தீர்களா" என மூன்று முறை அவர்களிடம் வீட்டுக்காரர் கேட்க கன்னிமாரும் 'சுகம் தந்தோம்" என மூன்று முறை கூறி வெளியேறும் மரபும் உளது.

சக்கரையமுது நடைபெறும் வீடுகளின் அயலவர்கள், உறவினர்கள் யாவரும் ஒன்று கூடி தத்தம் வீடுகளிலேயே இந்நிகழ்வு நடைபெறுவது போன்ற கூட்டுணர்வை பக்தி பரவசத்துடன் வேலைகளை பகிர்ந்து உதவி புரிவர். சிறுவர் நாம் அதிகாலையில் பூக்கொய்து கொடுப்போம்.

வளங் கூடிய குடும்பங்கள் இவ்வாறு மூன்று காலச் சடங்கு செய்ய, வசதி குறைந்தவர்கள் இரவிலேயே அம்மனுக்குப்பொங்கலும் வைரவருக்கு ரொட்டியும் வைத்து ஒரு கால வழிபாடு இயற்றுவர்.

ஒரு சிலர் கார்த்திகை பூரணையன்று 'பெட்டி மடை" (பனையோலை பெட்டியினைக்கவிழ்த்து அதன் மேல் பூசைத்திரவியங்கள் படைத்தல்) வைத்து அம்மனுக்கும் வைரவருக்கும் பொது வணக்கம் செய்வர். கூட்டுக் குடும்பச் சிதைவு, மக்கள் இடம்பெயர்வு, வழமின்மை முதலிய காரணங்களால் மரபு வழிச் சிந்தனையில் ஏற்பட்ட மாற்றங்கள் இங்கும் பிரதிபலிக்கின்றன. பல இடங்களில் இரவு வேளைகளில் ஒரு நேரச்சடங்கு மட்டுமே செய்கின்றனர். சில இடங்களில் இது அருகி விட்டது. ஆயினும் பாரம்பரியம் சில இடங்களில் பேணப்பட்டு வருவதையும் காண்கிறோம்.

நான்

மட்டக்களப்புக் குழைந்தைகளைச் சிறுவயதில் தாக்கும் அம்மை, கண்ணோய் முதலியவற்றாலும் தலைக்குத்து, குக்கல் போன்றவற்றாலும் - அடிக்கடி இவற்றில் ஏதாவது ஒன்றினால் தாக்கப்படுவேன். அப்போதெல்லாம் கண்ணகையும், மாரியம்மனுமே எனது தாயாருக்கு கைகொடுப்பார். காவடி, அங்கபிரதட்சணை, பொய்க்கால்- நேர்த்திக்கடனாக நிகழும். ஆரையம்பதி வம்மிக்கேணி மாரியம்மன் கோயிலில் முன்னுள்ள கிணற்று நீரில் அதிகாலை நாலு மணிக்கு அம்மா என்னை அழைத்துச்சென்று முழுக்காட்டி நீறணிந்து கற்பூரம் கொழுத்தி வருவார். கட்டாடியார் கண்ணகியம்மனுக்குக் காவடியெடுக்க நேர்த்தி வைப்பார். ஆரையம்பதியில் ஏற்பட்ட தெருச்சண்டை ஒன்றினால் நான் இரண்டு கண்ணகியம்மன் கோயில்களுக்கும் நான்கு தடவை காவடி எடுக்க வேண்டிவந்தது. எனது பெற்றோரின் நம்பிக்கை ஒரு நாளும் சிதறவில்லை. பெற்றோரை இழந்த பின்புதான் நானும் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறேன். இது அரை நூற்றாண்டின் முன்னுள்ள கதை எமது சமூகக் கட்டமைப்பில் இன்றும் இதுவே வலுவுள்ளதாக இருக்கிறது. இனியும் இருக்கப்போகிறது.

உதவிய துணைப் பதிவுகள்


- இந்து தர்மம் 1963/64 - பெண் தெய்வங்கள் -1
-க. நவசோதி

-இந்து நதி-1987 - தமிழ் மரபில் பத்தினி வழிபாடு -2
-சில சிந்தனைகள் பேராசிரியர்.செ.கிருஷ்ணராசா

- கலைக்களஞ்சியம் -3.7.8

- இலங்கைத்திரு நாட்டின் இந்துக் கோயில்கள் பிரதேச அபிவிருத்தி இந்துகலாச்சார அமைச்சு - 4,6,9,10,11,13

- தினகரன் வார மஞ்சரி
"வைகாசி மாதத்தில் நாடெங்கும் நடைபெறும் கண்ணகி சடங்கு"
மூனாக்கானா.-5,16

மட்டக்களப்பு சிறு தெய்வ வழிபாடு ஓர் அறிமுகம்-12
கா.மகேஸ்வரலிங்கம்

- இலங்கையின் இந்துக் கோயில்கள் பகுதி-1-14
பேராசிரியர் சி. பத்மநாதன்
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு

- அகில உலக இந்து மகாநாட்டு மலர்1982 -15
"தாய்மையே இறைவனின் முதல்வடிவம்"
பண்டிதை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

- மொஹேஞ்சோ-தரோ அல்லது சிந்துவெளி நாகரீகம்
டாக்டர் மா. இராசமாணிக்கம்பிள்ளை

-மட்டக்களப்பு சைவக்கோயில்கள்
பண்டிதர் வித்துவான் வீ.சி.கந்தையா

- "தேரோட்டம்"
கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேக மலர் 1998

- மட்டக்களப்பு மரபு வழிநாடகங்கள்
கலாநிதி. சி. மௌனகுரு

- மண்முனைப் பிரதேச செயலகப் பதிவு ஆவணங்கள்
-நண்பர்கள்-திரு.மா.காசிப்பிள்ளை, திரு.ஆ.சிவலிங்கம், திரு.சா.குழந்தைவேல் J.P.திரு.த.கோபாலரெத்தினம், திரு.பி.சின்னத்தம்பி, திரு.க.சிவநேசராசா, வெ.தவராஜா, திரு.எம். பொன்னம்பலம்.

'சாதிகள் இல்லையடி பாப்பா'

# மண்முனைப் பற்றுப் பிரதேசத்தின் சமுதாய அமைப்பு

-சி.க. பொன்னம்பலம்.

மட்டக்களப்புத் தமிழகத்தின் நடுநாயகமாக - இருதயமாக விளங்குவது மண்முனைப் பற்றுப் பிரதேசமாகும். புதிய நிருவாகச் சீராக்கல் செயற்பாட்டின் அடிப்படையில் இப் பிரதேசம் தனியானதோர் பிரதேச செயலகப் பிரிவாக அமைக்கப்பட்டது மிகுதியும் பொருத்தமானதாகும். இப் புதிய பிரதேசத்தில் ஆரையம்பதி, பாலமுனை, காங்கேயனோடை, தாளங்குடா, புதுக்குடியிருப்பு, கிரான்குளம் ஆகிய பெருங் கிராமங்கள் அடங்குகின்றன. ஒவ்வொரு பெருங்கிராமத்தின் கண்ணேயும் சில குக் கிராமங்கள் அமைந்து கிடப்பதும் கண்கூடு.

இக் கிராமத்தில் வாழுகின்ற மக்களின் தன்மையை ஆராய்கின்ற பொழுது, இவர்கள் இன ரீதியாகவும், மத ரீதியாகவும், சாதி ரீதியாகவும் பல்வேறு சிறு சிறு குழுக்களாகக் காணப்படுகிறார்கள்.

இவர்களை இன அடிப்படையில் நோக்கும் வேளையில், தமிழர்களாகவும் இஸ்லாமியர்களாகவும் தென்படுகிறார்கள். அவ்வாறே, சமயக் கண்ணோட்டத்துடன் அணுகுகையில், இந்துக்களாகவும், முகமதியர்களாகவும், கிறிஸ்தவர்களாகவும் அறிமுகமாகிறார்கள்.

சாதியை முதன்மைப்படுத்திப் பார்ப்போமானால், இப் பிரதேசம் முழுவதிலும் வாழுகின்ற மக்களைப் பின்வரும் சாதிகளுக்குள் அடக்கிப் பார்க்க முடிகிறது :-

01. கரையார் (குருகுலத்தார்)
02. முற்குகர்
03. நம்பிமார்
04. வேளாளர்
05. தட்டார்
06. கம்மாளர்
07. கைக்கோளர் (செங்குந்தர்)
08. சாண்டார் (பணிக்கர்)
09. பறையர் (மூப்பர்)
10. நாவிதர்
11. வண்ணார் (ஏகாளி)
12. குயவர்
13. எண்ணெய்வாணிபர்
14. கொல்லர்
15. கடையர்
16. துரும்பர்

பழைய காலங்களில் மேற்படி சாதியினர் அனைவரும் இங்கு வாழ்ந்திருக்கின்றனர். ஆனால், இக்காலத்தில் இச் சாதிகளுள் சில இல்லாமற் போயுள்ளன. இவர்கள் சிறுபான்மையினராகக் குறைந்து குறைந்து ஈற்றில் முழுமையாகவே குடிபெயர்ந்ததாக அறியமுடிகிறது.

கடலோரங்களை அண்டி வாழ்ந்தவர்கள் "கரையார்" என்றழைக்கப்பட்டனர். இவர்கள் பகைவர்களிடமிருந்து நாட்டைக் காக்கும் பெரும் பணி புரிந்தோர் ஆவர். மனவுறுதி மிகக் கொண்டவர்கள். "நம்பற்குரியர் அவ்வீரர் - தங்கள் நல்லுயிர் ஈந்தும் நாட்டினைக் காப்பர்" என்ற வீர வாக்கியத்துக்கு இலக்கணமாகத் திகழ்ந்தனர். இவர்களை "Warriors" என ஆங்கிலத்தில் அழைப்பர். இதனாலன்றோ "கரையார மக்களுடைய வீரமும் பெருமையும் புலவராலும் பாடிமுடிக்க இயலாதவை" என்று கண்ணகிவழக்குரையில் இடித்துரைக்கப்பட்டுள்ளது.

மண்முனைப் பற்றுப் பிரதேசத்திலே, ஆரையம்பதிக் கிராமத்தில் பெருமளவாகவும், தாளங்குடாக் கிராமத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலும் கரையார் வாழ்ந்து வருகின்றார்கள். முற்காலத்தில், தாளங்குடாவில் வாழ்ந்த கரையார மக்களுக்கு ஒரு சீர்வரிசை கூடுதலாக வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

"கரையார் கம்பிளியா ராறுகாட்டி
கருது முதலித்தேவன் வயித்திவேலன்
தறைசெறி வங்காளம் வீரமாணிக்கன் தான்
கரையார் ஏழாய்த் தரித்தான் பாரில்"
(மட்டக்களப்பு மான்மியம்.)

இப் பாடலிற் காட்டப்பட்டுள்ள ஏழு குடிகளில், காரையூர், கம்பளியார் என்றுரைக்கப்பட்ட இரண்டு குடிகளும் இங்கு காணப்படவில்லை. எனினும், அவற்றுக்குப் பதிலாக வேறு பல குடிகள் தற்சமயம் நடைமுறையில் இருக்கின்றமையை அவதானிக்க முடிகிறது. இப்பொழுது காணப்படும் குடிகளாவன,

01. ஆறுகாட்டி குடியார்
02. முதலித்தேவன் குடியார்
03. வயித்திவேலன் குடியார்
04. வங்காளக் குடியார்

05. வீரமாணிக்கன் குடியார்
06. திருவிழாக் குடியார்
07. சம்மானோட்டியார் குடியார்
08. புலவனார் குடியார்
09. குரவர் குடியார்
10. பொன்னாச்சிக் குடியார்
11. மன்றிலாடியார் குடியார்
12. அலரித்தேவன் குடியார்
13. அருமைத்தேவன் குடியார்
14. சிறப்பினாக் குடியார்
15. விக்கரமபாலசிங்கக் குடியார்
16. வேட வேளாள குடியார்

இலங்கைத் தீவின் வனப்பையும், செல்வச் சிறப்பையும் உள்ளது உள்ளவாறே கேள்வியுற்றனர் "முற்குகர்". இவர்கள் இந்தியாவிலே ஆயோத்தி நகரிலே வீரத்துடனும், ஆளுமையுடனும் வாழ்ந்து வந்தனர். ஆதலால், இவர்களுக்கு அழகிய இந்தத் தீவைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. இலங்கைக்குப் படையெடுத்து வந்த இவர்கள் எவ்வாறோ மட்டக்களப்பை வந்தடைந்து நிலைகொண்டனர். அக்காலத்தில் மட்டக்களப்பை அண்டிய பிரதேசத்தில் "திமிலர்கள்" என்போரும் வாழ்ந்தனர். பட்டாணியர்களின் துணையுடன் திமிலர்களைத் துரத்தியடித்த முற்குகர் மட்டக்களப்பை ஆண்டு வந்தனர்.

மண்முனைப்பற்றுப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில், கிரான்குளம், புதுக்குடியிருப்பு, தாளங்குடா ஆகிய கிராமங்களில் முற்குக மக்கள் நெருக்கமாக வாழ்ந்துவருவதைக் காணலாம். இம் முற்குக மக்களுக்கெனவும் குடிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அவையாவன,

01. காலிங்காகுடி
02. படையாண்டகுடி
03. உலகிப்போடிகுடி
04. பணிக்கனா குடி
05. கோப்பிகுடி
06. கற்சிலாகுடி
07. பெத்தாண்ட படையாண்டகுடி என்பனவாம்.

இங்கு வாழுகின்ற இஸ்லாமியர்களின் சரித்திரம் மிகவும் சுவாரஸ்யமானது. இவர்கள் தமிழ்த் "தாயாதிகளைக்" கொண்டவர்கள். முற்குகர் மட்டக்களப்பில் வாழ்ந்த காலத்தில் அங்கே திமிலர்களும் வாழ்ந்து வந்தார்கள். அசுரத் தோற்றமும் இராச்சத குணமும் கொண்ட திமிலர்கள் முற்குகர்களுக்குப் பல்வேறு இடர்பாடுகள் ஏற்படலாயின. இதனால் முற்குகர் மிகவும் துன்பப்பட்டனர். திமிலர்களை வெல்லும் தகுதியும் திறமையும் முக்குகர்களிடம் இருக்கவில்லை. ஆதலால்; அவர்கள் வியாபாரத்தின் பொருட்டாக ஆப்கானிஸ்தானிலிருந்து இங்கு வந்திருந்த பட்டானியர்களின் உதவியை நாடினர். ஈற்றில், பட்டாணியர்களும் முற்குகர்களும் இணைந்து திமிலர்களுடன் சண்டையிட்டு திமிலர்களைத் துரத்திச் சென்று வாகரைக்கு அப்பால் விட்டுவந்தனர். பட்டாணிகள் செய்ய இத்தகைய உதவிக்காக முற்குகர் அவர்களின் ஏழு குடிகளிலிருந்தும் ஏழு பெண்களைப் பட்டாணிகளுக்கு மணம் முடித்து வைத்தனர். இந்தப் பரம்பரையில் எச்சங்களே இப்பொழுதுள்ள முஸ்லீம்கள். முற்குகர், கரையார் என்பவர்களுக்கு வகுத்துக் காட்டப்பட்டது போன்று, இங்குள்ள முஸ்லீம்களுக்கும் பல்வேறு குடிகள் நடைமுறையிலுள்ளன. அவை பின்வருமாறு அமையும்:-

01. மரைக்காரன்காரக் குடி
02. சம்மாட்டிக் குடி
03. சாயக்காரன் குடி
04. உதுமான்பிள்ளைக் குடி
05. ஆலிம் குடி
06. நெயினா ஓடாவியார் குடி
07. கச்சினா குடி
08. கொச்சிக்கொட்டைக் குடி
09. லெப்பை குடி
10. மாந்தறா குடி
11. மூக்கரக்கஸ்ஸாக் குடி
12. படையாண்ட குடி
13. மலைப்போடியார் குடி
14. வள்ளக்காரன் குடி
15. கோசங் குடி
16. ஓடாவியார் குடி

இவ்வாறே ஒவ்வொரு சாதியாருக்கும் அவரவர்க்குரிய தனித்துவமும் சரித்திரச் சிறப்பும் உள. அவற்றையெல்லாம் இங்கே எடுத்து ஆராய்ச்சி செய்தல் பொருத்தமாகத் தெரியவில்லை. பிறிதோர் சந்தர்ப்பம் வாய்ப்பின் ஆராய்வோம். ஓர் இயந்திரம் சரியாக இயங்க அதன் பல்வேறு பாகங்களும் இயங்குதல் வேண்டும். அதேபோன்று, சமுதாயம் செவ்வனே இயங்க அதன் அங்கங்களாகிய மக்கள் குழுக்களும் தனித்தும் ஒன்றுபட்டும் முறையாகச் செயற்படல் அவசியமாகும். இவ்வாறு மக்கள் ஒவ்வொருவரும் மற்றொருவரில் தங்கி வாழுவதே சமுதாய அமைப்பு ஆகிறது. "செய்யுந் தொழிலே தெய்வம்" என்றார் மகாகவி பாரதியார். உலகிலே ஒரு சாதியினருக்கெனப் பண்டு தொட்டு இருந்து வந்த குறித்த ஒரு தொழிலை இக் காலத்தில் வேறு சாதியினரும் அத்துமீறிச் செய்துவருவதைப் பார்க்கின்றோம். ஆதலால் இப்பொழுது பேதமை உணர்வு அல்லது உயர்வு, தாழ்வு உணர்வு மங்கிப்பொருள் ஈட்டுவது என்பதே தலைதூக்கி நிற்கின்றது. ஆதலால்

உலகசமய அமைப்பொன்றை ஆக்குவதும், உலக சமுதாய அமைப்பொன்றை உருவாக்குவதே இன்றைய தேவைகளாகும்.

முற்காலத்தில் மக்களைச் சிறு சிறு குழுக்களாகக் குடிகள் என்ற பெயரோடு அமைத்ததன் நோக்கம், அந்தந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள்ளே ஒற்றுமையாகவும் உறவாகவும் இருந்து, கூட்டாக இணைந்து ஆலயங்களிலும், பள்ளிவாசல் களிலும், சமயச் சடங்குகளைச் சீர்வரச் செய்வதற்கேயாம். இந்த நடைமுறை இப்பொழுதும் கைக்கொள்ளப் பட்டுவருவது வரவேற்கத்தக்கதாம். ஒரு குடியினரை விட இன்னொரு குடியினர் உயர்வானவர் என்ற கருத்து முன்னரும் பெரிதாக இருக்கவில்லை. இப்பொழுது அடியோடு இல்லை. இதன் காரணமாக குடிகள் அமைப்பு முறையானது ஒற்றுமையை வளர்ப்பதற்கு ஏதுவாக அமைந்ததேயன்றி வேற்றுமையைத் தோற்றுவிப்பதற்காகவல்ல.

ஒவ்வொரு சாதியினரும் இப் பிரதேசத்தில் தத்தமது தனிச் சிறப்புகளுடன் மிகவும் சுதந்திரமாக வாழ்ந்து வருகின்றார்கள். ஒவ்வொரு சாதியினருக்கும் தனித்தனி ஆலயம் இருப்பதையும், அதனை அவர்கள் எப்பாடுபட்டாவது பராமரித்து வருவதையும் காணுகின்றோம். ஒரு சாதிக்காரரின் ஆலய விழாக்களில் ஏனைய சாதியினர்களும் பெருமளவில் கலந்து சிறப்பிப்பதையும் அவதானிக்க முடிகிறது.

இவற்றையெல்லாம் அடிப்படையாக வைத்து நோக்கும் பொழுது, மண்முனைப் பற்றுப் பிரதேச மக்களின் வாழ்வும் வளமும் ஏனையோருக்கு முன்மாதிரியான ஒன்றாகக் கொள்ளப்படலாம்.

"சாதிகள் இல்லையடி பாப்பா" என்ற இனிய உண்மை இங்கே நிதர்சனமாக அனுபவிக்கப்படுகின்றது. இத்தகைய மனிதநேயம் மேலும் வலுப்பெற்று நிலைபெற வாழ்த்துவோம். இப்பிரதேச மக்கள் அனைவரும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் போன்று ஒரு சமமாக வாழ்ந்து வருவது தெய்வச் செயலாம்.

" புகழோங்கு மண்முனைப் பற்றோங்கு குடிகளும்
குலங்களுழ் கோத்திரங்களும்
தகவோங்கு சாதியும் சமயநெறி யானதும்
சமமானதாக மிளிர
திகழ்ஞான சாத்திரம் சீர்கல்வி செந்தமிழ்க்
கலையார்வ முள்ள புலவோர்
மிகமுந்தி வந்துநற் பணிசெய்து நின்றிடல்
மிக்கபல வீட்டு மன்றோ !"


விழாவின் நிறைவுக்காக வாழ்த்துக்கூறுகிறது

ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருவன் போட்டான் கத்தரிக்காய்
காசுக்கு ரெண்டாய் விக்கச் சொல்லி
கடிதம் போட்டான் வெள்ளக்காரன்
-பிரதேச ஊஞ்சல் பாட்டு

வர்மா அரிசி ஆலை

பிரதான வீதி,
ஆரையம்பதி.

# ஏழைக் குடிசையின் ஓலம்!



அவள் - *தின்னக் குடிக்க வழியுமில்லை -நீங்க*
*திண்ணையில் குந்தி விழிப்பதென்ன ?*
*தேயிலை சீனி முடிஞ்சுதுங்க - நாளை*
*தேங்காய் அரிசியும் காணதுங்க.*

அவன் - *வரவும் செலவும் பதிஞ்சிருக்கு - அதில்*
*வட்டியும் குட்டியும் போட்டிருக்கு*
*வயலின் விளைவு நிறைஞ்சிருக்கு - அவர்*
*வாசலில் நெல்லுக் குவிஞ்சிருக்கு*

அவள் - *வாயில்லாப் பூச்சியாய் நாமிருந்தால் - அவர்*
*வண்டியும் தொந்தியும் தான் பெருக்கும்*
*வாதாடிக் கூலியைக் கேட்டிடுங்க - அவர்*
*வாசலில் சென்று படுத்திடுங்க.*

- *நாலு பணந்தர ஆளுமில்லை - நம்மை*
*நாயென்று பார்ப்பார் எவருமில்லை*
*பாழும் வறுமையின் கோரத் தொல்லை*
*- நாளை*
*ஏழு உயிருக்குக் கூழுமில்லை*

அவன் - *வேலைக்கு கூலியை வாங்காமல் - இனி*
*வீட்டுக்கு நானும் வருவதில்லை.*
*தீட்டிய கத்தி மடியிலுண்டு - இது*
*தீராமல் நானும் வருவதில்லை !*

அவன் - *கூலிக்கு வேலி அடைச்சேண்டி - அவர்*
*கொடுத்தது ஐந்து பத்து ருபாயடி*
*கோவில் வரிக்கு வருவானடி-நாளை*
*குறுணலுக்கே பணம் இல்லையடி*

அவள் - *பொழுது விடியமுன் போயிடுங்க*
*போடியார் காலில் விழுந்திடுங்க*
*வேலைக்கு கூலியை கேட்டிடுங்க - நம்ம*
*வீட்டு நிலையையும் சொல்லிடுங்க.*

அவன் - *வாழைக்குலை தயிர் வேணுமடி - அவர்*
*வாசல் படியை மிதிப்பதற்கு*
*ஏழைக்கு என்னடி வாழ்விருக்கு ? - நாம*
*எந்திரத்தை விட மோசமடி*

அவள் - *ஏழையைச் சாறு பிழிந்ததென்ன ? - அவர்*
*ஏட்டிலே கணக்குப் பதிந்ததென்ன?*
*ஓட்டிலே சோளம் பொரியா - நாம*
*வீட்டிலே வெந்து தவிப்பதென்ன ?*



**க.அமரசிங்கம்**
**(ஆரையூர் அமரன்)**

# மண்

த. மலர்ச்செல்வன்



சே, இந்த ஊர்க்காரர்களுக்கு கொஞ்சம் கூட மூளையில்லை. ஒரு நிழல் மரம் கூட இங்கிருக்கா? சின்னச் சின்ன பத்தையைத் தவிர வேறு என்னதான் இங்கிருக்கு ? என்ன வெயிலாக்கிடக்கு அப்பா.... சுள்ளென சுட்டெரிக்குதே. அவன் சொல்லாவிட்டால் வந்திருக்கத் தேவையில்லை. என்வயதையொத்த ஒருவரையும் காணோமே. முத்தா, சுது ..... அந்தக் குறுப்தான் மண்ணையள்ளிக் கொட்டுகிறார்கள். கொஞ்சப்பட்டாளம் கடலில் குளித்து கூத்தடிக்கிறார்கள். நானும் இங்கு நின்டு என்னத்தப் புடுங்கிற. மெல்ல, மெல்ல நகர்கிறேன்.

விசர் கொண்டு காற்று என்னில் மோதி அறைந்து போகிறது. ஆணலையும் பெண்ணலையும் வீறு கொண்டு கடற்கரையை மோதியுடைத்தன. இந்தாதான் வந்துவிடுமோ என்ற பயம் வேறு எனை உலுக்கியது. அதைப் பார்க்கப் பார்க்க விசராய் என்னுள் ஏதோ எழுகிறது. மூளையில்லையா இந்த ஊரவர்கள் என்னபாடு படுத்தியிருக்கிறார்கள். அதைப் பார்க்கப் பார்க்க வயிறுவாய் பத்தியெரிந்தது. இன்னும் ஐந்து வருசத்தால இந்த ஊரைக் கடல் சாப்பிட்டு விடுமா? இல்ல ஒரு பத்து வருசத்துக்குப்பின்னாலையா? பெரு வாயை ஆவென்று இந்து சமுத்திரம் எனைப் பயமுறுத்தியது. தோண்டப்பட்ட அந்தப் பெரும் ஓடைக்குள் நின்று பார்க்கிறேன். எனைப் போல் மூன்று அல்லது நாலு பேரைத் தாக்கும் பெரும் ஓடை இது போல் வலதுபக்கமும் இடது பக்கமும் தோண்டி எடுக்கப்பட்டிருக்கிறது.

பெரும் துயர் எனில் படர, தாழைமர ஓரத்தில் கையைக் குத்திக் கொண்டு கடலை விறைத்துப் பார்க்கிறேன். என்னில் பழைய காலங்களும் முகங்களும் கொத்துக்கொத்தாய் வந்து விழுகின்றன.

கண்ணகி அம்மன் கோவிலுக்கு மண்ணடிக்கத்தான் முதன்முதலில் வீட்டுக்குத் தெரியாமல் கடற்கரைக்குப் போயிருக்கிறேன். அப்ப பதின்மூன்று, பதினைந்து வயதிருக்கும். இப்ப இருப்பது போலில்லை கடற்கரை, கடற்கரையை அண்டிய பகுதிகளெல்லாம் நிறைந்ததென்னமரங்களும், தாழை மரங்களும், தாகமெடுத்தால் என்ன குறை இளநீர் வயிற்றை நிரப்பும். இப்ப எங்க? ஒரு தென்ன மரத்தைக் கூட மருந்துக்கும் காணோமே! அந்த நாளில் நான் பார்த்த கடற்கரை எவ்வளவு தூரத்தில் இருந்தது. இப்பயிருக்கிற மடுவும், பெரிய ஓடை போன்ற பள்ளங் கூடயில்லை! இந்தக் கிணறு எப்படியிருந்தது? இன்று ஒரு பக்கம் கெழிந்து. இந்தா, அந்தா விழப் போவது மாதிரியல்லோ இருக்கு.

ஆ! அந்தக் காலம்தான் ஒரு பொன்னான காலம். காலமை எட்டு மணிக்குப் பின் மண் ஏத்தத் தொடங்கினால் பொழுது பட்டு நிலவு கிளம்பிய பின்னும் மண் ஏத்துதல் தொடரும். (அப்ப, பத்துப்பதினைந்து மெசின் வேலை செய்யும்) வெள்ளமாமா, வண்டா, தம்பான் ராசா அண்ணன், குலசேகர அண்ணன், சின்னநாதன் ........ பெரிய ஆக்கள் அப்ப, நல்ல சிஸ்ரமாக எல்லா வேலையும் செய்வார்கள். ஒரு துளி மண் கூட வெளியில விற்க ஏலாது. டீசல் அடிக்கிறதோ, மண்ணாங்கட்டி அடிக்கிறதோ எல்லாம் அந்தச் "செற்" காசு போட்டுச் செய்யும். நேரத்துக்கு நேரம் சாப்பாடு மதியம் 12½ மணிவரை பாண், ரோல், வணிஸ், தேத்தண்ணி, ரிங்ஸ். மத்தியானம் சோறு, பின்னேரம் பாயாசம், கள்ளத்தீன் என வயிறு நிரம்பும் இப்ப நினைத்தாலும் உமிழ் நீர் சுரக்கிறது.

குலசேகர அண்ணன் என்றால் எல்லாருக்கும் பயம்தான். சும்மா வேலை செய்யாமல் நிற்கவிடமாட்டார். "மருமகன் இஞ்சவாங்க, இதத்தூக்குங்க". அந்த மனிசன் பக்கத்தில் நின்றால் கண்ணுக்குள்ள மண்ணைத்தூவிவிட்டு தாழம் பத்தைக்குள்ள "அம்பியுஸ்" தான். விடிஞ்சாத்தான் தெரியும் மேல் வருத்தம், அம்மா.... சுள்ளென்று குத்தி முதுகெலும்பு விர்ரென நோகும்.

அதெல்லாம் ஒரு காலம்தான் இப்பெங்க? பட்டாளக்கிளையள். கொஞ்சப் பேர் மண் ஏத்த மத்தக்

கிளையள் கடலுக்குள்ள கிடக்கு. சாப்பாடு என்றால் ஈயான் கிளைகள் போல மொய்குதுகள் எனக்கு அப்ப சின்ன வயதால மண்ணரிப்பு பற்றி ஒரு மண்ணும் தெரியாது இல்லாட்டி அப்பவே பின்னின்றுயிருப்பேன்.

இன்னும் விட்டு வைத்தால் நம் சந்ததிகள் இந்த ஊரில் வாழ முடியாது. இந்த நேரத்திற்குள் எத்தனை லோட்டுத்தான் போயிற்றோ? டீசல் காசிக்கென்று எத்தனை லோட்டுத்தான் காத்தான்குடியிலும், ஊருக்குள்ளும் வில்பட்டிருக்குமோ?. ம்.... பெரும் சிரிப்பாகயிருக்கு. கோவில்தொண்டுக்கென மெசினக் கொடுத்த பின் கடைசியில் அவர்களுக்கும் ஒரு லோட்டு நல்ல தொண்டு ஒரு கல்லில் இரண்டு மாங்கா என்பது இதுதானா?.

எப்படிப் போனாலும் போகட்டுமென சும்மா கிறுக்குத்தனமாய் யோசிக்க முடியாது. இந்த அதிகாரிகளும்தான் என்ன செய்வார்கள் ஒவ்வொரு வருசமும் இருபத்தைந்து, முப்பது கோவிலுக்கு மண்ணடிக்கிறதென்டா சும்மா வேலையா?.

எனக்குள் குமுறிக் குமுறி எழுந்தது அடக்கமுடியாத கோபம். தலையைத் திருகனும் போலிருந்தது. "அதிகாரிகளுக்கு" தெரியுமோ? தெரியலையோ? கோவிலுக்கு மண்ணடிக்கிற சாட்டில் காத்தான்குடியிலும். ஊரினுள்ளும் மண்விற்கின்ற சமாச்சாரம்.

" ஊரை விழுங்கப் போகிறேன் " மீண்டும் இராட்சத அலையொன்று ஞாபகம் மூட்டியது. இன்னும் இருக்க மனம் இடம் கொடுக்கவில்லை. பின்பக்கம் ஒட்டிய மண்ணைத் தட்டிவிட்டு தாழம் பத்தைக்கருகில் கிடந்த "செருப்பை" மாட்டிக் கொண்டு ரோட்டை நோக்கி நகர்ந்து வருகிறேன். திவா என்னை நோக்கி ஓடிவருகிறான். அவனுக்கு எங்க, இதப்பற்றி விளங்கப் போகுது. கடல் வந்தால்த் தான் என்ன? காவரி வந்தால்த் தான் என்ன? முஸ்பாத்தி இருந்தால் போதும் ஊரைப் பற்றி யோசித்திருப்பானா? கோவில் சடங்கு தான் முக்கியம். அப்பதானே " காய் " பார்க்கலாம்.

" என்ன மச்சான், மண்ணடிக்க வரலையா ?
இல்லடா, தலைக்கால இடிக்குது வீட்ட போப்பறன்".

என்னருகில் நிறைமாதக் கற்பிணியாய் வந்த "மெசினில்" தாவி ஏறினேன். குலுங்கிக் குலுங்கி கோவிலடியை வந்தடைந்தது. எனக்கு அவ்விடம் நிற்பது உசிதமாகத் தெரியவில்லை. ஏதாவது கதைத்து ஏன் சண்டையில் இறங்குவான்?

சாய்மானக் கட்டிலில் சாய்ந்த பின்தான் நெருப்பில் ஊற்றிய தண்ணீராய் சற்றுக் கோபம் தணிந்திருந்தது. எனக்கு என்ன நடந்தது? இன்று நடந்ததெல்லாம் கனவா? உண்மையா? மற்றவர்களுக்கு ஏற்படாத உணர்வு எனக்கு மட்டும் ஏன் ஏற்படனும்? அவர்களோடு சேர்த்து செல்வா நகர்வரை தோண்டிவிட்டாலென்ன? மீண்டும் ஏதோ கிறுகலாகத்தான் சிந்திக்கிறேன்.

அம்மா சூடான தேனீர் ஆவி பறக்க என்னருகில் வந்தா. "என்ன மகன் கோவிலுக்கு மண் அடிச்சி முடிஞ்சா" ?

ஓம் அடிக்கிறாங்க அம்மாக்கும் எனக்கும் கடவுள் மண்ணாங் கட்டியென்டா முரண்பாடுதான். வாறபோற கிழமை பிடிப்பதும், கோவில் குளம் என்று திரிவதும் "கல்" உனக்கு என்ன செய்யப் போகிறது. சும்மா உனக்கு வேறவேலையில்லையா? அம்மாக்கும் எனக்கு அடிக்கடி எழும் போர்க்களம் இப்பயில்ல. "ஜயசிக்குறு" தொடங்கிய பின் நான்தான் பின்வாங்கிற்றன். (இப்ப கொஞ்சம் மெலிந்திட்டன். வாரதும் கந்தசஷ்டி எப்படித்தான் கழிக்கப் போறனோ?)

இரவு பத்து மணியைத் தாண்டிற்று. கடல் இரைச்சலை விட வேறு ஒரு சத்தமும் இல்லை. யார்தான் இந்த நேரத்தில முழிச்சிருப்பா? ஆமிக்காரன் மட்டும் திரிவான், நிலா முற்றத்தில் அமர்ந்து நாலையும் பத்தையும் கதைக்க எங்க சுதந்திரம் இருக்கு? அப்படியிருந்தால் புலிக்கு நீயுஸ் கொடுக்கவா இருக்கிறீங்க, என்ற உறுட்டலுக்கு ஏன் வழி வைப்பான் என்று சனங்கள் நேரத்தோட உறங்கிவிடுங்கள். நாங்கள் மட்டும் இப்படி புதிசா சுதந்திரம் கிடைத்த மாதிரி ஏனோ தெரியல இன்று?

" கடலில் பெரும் குழப்பம் போல, கடல் இரைச்சல் பெரிதாகக் கேட்குதே !" அப்ப ஏதோ முணுமுணுத்தார். "குழப்பமில்லை ஒன்றுமில்லை கடல் செல்வாநகருக்கு வந்திட்டுப் போல, என்ன ஒரு நாளைக்கு வரத்தானே போகுது" ?.

நான் மனதுக்குள்ள சொன்னதை பக்கிள் ஒன்று ஆமோதித்துக் கத்தியது. மேலும் இரண்டு பக்கிள் கூட்டம் சேர்ந்து பெரும் எரிச்சலாய்ப் பொயிற்று. அம்மா சொன்னா, " யாரோ சாகப் போறா " எனக்கு சுள்ளெனப்பட்டது. ஊரே அழியப் போகுதோ? கல்லெடுத்து விட்டேன் எறி. ஆக்.....ஆக் எனக்கத்திப் பறந்திற்று.

கடல் அலை மட்டும் இரைந்து, கிட்ட வருவது போல் கேட்டுக் கொண்டே இருக்கின்றது. வரும் ஒரு நாளை, நானும் இந்த ஊரும் இராட்சத அலைக்குப் பலியாகித் தான் போவோம் பார்!.



# வழக்கொழிந்து வரும் நாடோடிப்பாடல்கள்

மு.கணபதிப்பிள்ளை (முனாகானா)



பாடல்களாக இருந்தாலும் ஆடலாக இருந்தாலும் உள்ளத்துக்கு மகிழ்வும், உடலுக்கு ஓய்வும் கிடைக்கும் போதுதான் கலைகள் மலர்கின்றன. கலைகள் மலர்ந்து மலிந்து கிடப்பது கிராமங்களிலேயே மட்டக்களப்பின் மகிமை கூறும் நாட்டுக்கூத்தின் பிறப்பிடம் கிராமங்கள். இங்குதான் ஏனைய கிராமிய கலைகளான கும்மி, வசந்தன், கோலாட்டம், களிக்கம்பு, மகுடி போன்றன பிறந்து வளர்ந்தது நாடோடிப்பாடல்கள் நலம் பெற்றிருந்தது.

ஆனால் இன்று நாட்டுக்கூத்தும், கிராமியக்கலைகளும் நாடோடிப் பாடல்களும் நலிவுற்று வழக்கொழிந்து போகின்ற அபாயகரமான நிலைகாணப்படுகிறது.

நாட்டவர் (கிராமத்தவர்) பாடுவதால் நாட்டார் பாடல் எனப்படுகிறது எனும் போதும் இதற்கும் ஓர் அர்த்தமுள்ளது. கிராமங்களே நாட்டார் பாடல்களின் பிறந்த வீடும், புகுந்த வீடும் ஆகும்.

பிரதேசத்துக்குப்பிரதேசம் இடத்துக்கு இடம், ஊருக்கு ஊர் இப்பாடல்களில் பயன்படுத்தும் பதங்களில் சில வேறுபாடுகள் காணப்பட்டாலும் அவற்றின் அர்த்தம், ஓசை ஒன்றாகவே இருக்கும்.

சாதி, மதம் வர்க்க வேறுபாடுகளைக்கடந்து சகலராலும் உச்சரிக்கப்படுவது நாடோடிப்பாடல்களே.

நாடோடிப்பாடல்களை பார்க்கும் போது அனேகமான நாடோடிப்பாடல்கள் பெண்களாலேயே பாடப்பட்டுள்ளன. ஆண்கள் கல்வியின் நிமித்தமும் தொழிலின் நிமித்தமும் வெளியிடங்களுக்குச் செல்கின்ற போது பெண்களே இவற்றைப் பாடினர். ஆனால் தொழில் பாடல்கள் ஆண்களாலேயே பாடப்பட்டன.

தாலாட்டுப்பாடல்தான் நாம் முதலில் கேட்கும சங்கீதம் அன்னையின் தாலாட்டில் மயங்காத குழந்தையே இல்லை. மட்டக்களப்பில் கிராமத்துக்குக் கிராமம் தாலாட்டுப்பாடல்களில் பயன்படுத்தப்படும் பதங்கள் மாறுபட்டுக் காணப்படுவதனை அவதானிக்கலாம் மண்முனைப்பற்று பிரதேச கிராமங்களிலே பாடப்படும் தாலாட்டு பின்வருமாறு அமைகிறது.

*ஆராரோ ஆராரோ*
*ஆரடிச்சி நீ அழுதா என்னரசி மகளார்-நீ*
*நீ அடிச்சாரச் சொல்லி அழு*
*கொட்டான் பிரம்பால் என் அரசி மகளைக்*
*கூட்பிட்டடிச்சாரோ*
*நெடிய பிரம்பாலே என்னரசி மகளே நீட்டி*
*அடிச்சாரோ*

*மச்சாள் மடிமேலும் என்னரசி மகளேமாமன்மார் தோள் மேலும்*
*சதுரகிரி மலையேறி என்அரசி மகளே சாதிலிங்கக் கட்டை வெட்டி*
*மாணிக்கக் கால் நாட்டி என்அரசி மகளே வச்சிரத்தால் தொட்டில் கட்டி*
*ஆணிப் பொன் தொட்டிலிலே என்அரசிமகளார் அழகாகக் கண்ணுறங்கு*

தாய் தன் மகளுக்குப் பாலூட்டி உறக்கம் செய்யும் போது தாலாட்டுப் பாடப்படுகிறது. பரம்பரை பரம்பரையாக செவிவழியாக இதன் தொடர்ச்சி பேணப்படுகிறது.

இராப்பொழுதில் சோறுண்ண அடம்பிடிக்கும் குழந்தைக்கு சோறூட்ட சந்திரனைக்காட்டி பாடலில் தொடர்பு கொண்டு கேள்விபதிலாக பாடப்படும் பாடலொன்றுள்ளது.

*'ஆண்டாரே ஆண்டாரே - எங்கெங்க போறா*
*கம்பு வெட்டப்போறன் - கம்பென்னத்துக்கு*
*காலை அடைக்க - காலை என்னத்துக்கு*
*மாடுகட்ட - மாடு என்னத்துக்கு*
*சாணி போட - சாணி என்னத்துக்கு*
*ஊடு மெழுக - ஊடென்னத்துக்கு*
*புள்ளபெற - புள்ளென்னத்துக்கு*
*எண்ணக் களத்துக்கு துள்ளித்துள்ளிப்பாய*

இந்தப்பாடலும் மண்முனைப் பிரதேச வழக்கிலுள்ள பாடலாகும்.

ஊஞ்சல் பாடலும் நாட்டுப்பாடலில் தனிச்சிறப்பானது சித்திரை வருடப் பிறப்பின் போது ஊஞ்சல்கட்டி அனேகமாக இளம் பெண்கள் சேர்ந்து பாட்டுப்பாடி ஊஞ்சல் ஆடுவது மட்டக்களப்பில் கிராமங்களிலுள்ள வழக்கம் பெண்கள் ஊஞ்சல் ஆடும் போது ஊஞ்சல் பலகையின் இரு அந்தங்களிலும் இருவர் எழுந்து நின்று கயிற்றைப்பிடித்துக்கொண்டு உந்தி ஆட மற்றப்பெண்கள் பலகையில் இருந்துகொண்டு பாடுவார்கள் உத்தி ஆடுகின்ற பெண்கள் ஏலேலம்......... ஏலேலம்.. என தருப்பாடுவார்கள்.

*சின்னச்சின்ன வெத்திலையாம் - ஏலேலம்*
*ஏலேலம்*
*சின்ன மச்சான் நித்திரையாம் - ஏலேலம்*
*ஏலேலம்*
*பெரியபெரிய வெத்திலையாம் - ஏலேலம்*
*ஏலேலம்*
*பெரிய மச்சான் நித்திரையாம் - ஏலேலம்*
*ஏலேலம்*

*கரப்பத்தான் பூச்சி சுண்டிரிக்கி*
*ஈச்சோலை ஆணம் காச்சிரிக்கி*
*இந்திரவாணி கறியாக்கிரிக்கி*
*கொட்டுக்கிணத்தில் வாய் கொப்புளிச்சி*
*கல்லுக்கிணத்தில கால்களுவித்து*
*வாகா மச்சான் சோறு தின்ன*

ஊஞ்சல் பாடலில் இன்னுமொரு வகையான பாடலும் இங்கு பாடப்படுகிறது.

*அரிமிளகு திரி மிளகு அன்னம் மின்னாக்கா*
*அம்பட்ட வண்ணான கும்பிட்டழைத்து*
*ஆறுமுக சாமியை கவுறாத் திரித்து*
*போடி யார்ர வள்ளியம்ம கோடியில*
*பீரங்கிவைக்க*
*போகுதாம் கப்பல் பெரியதுற பார்க்க*

இந்தப்பாடல் அனேகமாக மண்முனைப் பிரதேசத்துக்கு மட்டும் குறிப்பாக ஆரையம்பதியில் மாத்திரம் பாடப்படும் பாடலாகவே ஊகிக்க முடிகிறது.

கிட்டிப்புள் விளையாட்டும் சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு இளைஞர்களால் ஆடப்படும் விளையாட்டாகும். இவ்விளையாட்டின் போது ஒரு குழுவினர் கிட்டிப்புள்ளை எவ்வளவு தூரம் வரை போட்டு முடித்துள்ளனரோ அவ்விடத்திலிருந்து கிட்டி ஆரம்பித்த இடத்துக்கு எதிர்க்குழுவினர் மூச்சு விடாமல் ஒருவர் விட்ட இடத்திலிருந்து மற்றவர் பாடி ஓடுவர் அப்போது பாடப்படும் பாடல்

*ஆலையிலே சோலையிலே*
*ஆலம்பாடிச் சந்தையிலே*
*கிட்டிப்புள்ளும் பம்பரமும்*
*கிறுகி அடிக்கப் பாலாறு*
*பாலாறு.....பாலாறு....பாலாறு*

இவ்வகையான நாட்டுப்பாடல்களிலே தாளத்தோடு இணைந்து பாடல்கள் உள்ளது போல தாளத் தோடு சேராத பாடல்களுமுள்ளது.

எடுத்துக்காட்டாக வீட்டுக்கு விசயம் சொல்ல வந்த ஒருவர் தலைவாசலில் நின்று செருமும் போது வீட்டுக்காரர் விசாரிப்பதும் வந்தவர் பதில் சொல்வது போல அமைந்த பாடல்

*ம் ம் ம் செருமுதல்*
*ஆரது தலைவாசல்ல*
*நான் தான் சொறிக் கணக்கன் சிங்சிலிப்பத்தன்*
*ராசாட மகளுக்கு கல்யாணமாம்*
*கொத்தோட மாங்கா குலையோட தேங்கா*
*பச்சரிசி பழம் பாக்கு நல்லெண்ண கோழிமுட்ட*
*எல்லாம் கொண்டு வரட்டாம்*

இந்தப்பாடல் எந்தச்சந்தர்ப்பத்தில் பாடப்பட்டது என்பதை தெளிவாகக் கூறமுடியாதுள்ளது. ஆனாலும் இன்னும் சிலரால் இது பாடப்படுவதை அவதானிக்க முடிகிறது.

பெண்கள் மீதான கட்டுப்பாடு அன்றும் இருந்தது என்பதற்கு பின்னுள்ள பாடல் எடுத்துக்காட்டாக அமைகிறது. முதியவர்கள் இளம் பெண்களுக்கு புத்தி சொல்லுவது போல இப்பாடல் வரிகள் அமைந்தாலும் எமது சமூகத்தின் பெண்ணடிமைத்தனம் எங்கும் புரையோடியிருந்தது என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

*ஏவி ஏவி நடவாதடி*
*இளந்தாரியப்பாராதடி*
*சீவிக் கொண்ட கட்டாதடி*
*சிலுக்குச்சீல உடுக்காதடி*

*இவ்வாறு மட்டக்களப்பின் நாடோடிப்பாடல்கள்* பிரசித்தமானவையும் தனித்துவமானவையுமாகும். மண்முனைப்பிரதேசமும் கிராமப்பகுதியைக் கொண்டதாக இருப்பதனால் இன்னும் இப்பாடல்கள் முழுமையாக இல்லாவிட்டாலும் இடைக்கிடை இப்பாடல்களைக் கேட்கக் கூடியதாகவிருக்கிறது.

இந்தக்கட்டுரை மண்முனைப் பிரதேசத்தின் நாடோடிப் பாடல்கள் தொடர்வான ஆய்வோ அல்லது முழுமையான கட்டுரையோவல்ல அதே வேளை இதன் நம்பகத்தன்மையும் உறுதிப்படுத்தப்பட்டவையுமல்ல.

இது ஒரு பரிசோதனை முயற்சி மட்டக்களப்பின் நாடோடிப் பாடல்கள் தொடர்பாக ஆய்வுகள் இடம்பெற வேண்டும். ஆவணப்படுத்தப்பட வேண்டும், அந்த முயற்சிக்கு ஒரு சிறு கோடாக இது அமைய வேண்டும் என்பதுதான் எனது எண்ணம்.




**விழா சிறப்புற்று மலர் மலர வாழ்த்துக்கூறுகிறது**

**மூலயில வெள்ளாம**
**முறுகி விளஞ்சிரிக்கி**
**அள்ளித் துவையா கண்டார் - ஒனக்கு**
**அளந்து தர நான் வாறன்.**
**(கிழக்கிலங்கை முஸ்லிங்களின் நாட்டார் பாடல்)**

**தர்மா ஆர்ச் ஆலை**

**பிரதான வீதி,**
**ஆரையம்பதி.**

# பிரதேச சாகித்திய விழா - 1998
## பரிசு பெற்றோர் விபரம்

பாடசாலை மட்டம்:-

பேச்சுப் போட்டி

*1ம் இடம்:-* *புவனேந்திரன் நிவேதிகா*
*மட்/ ஆரையம்பதி இ.கி.மி.பாடசாலை*

*2ம் இடம்:-* *சண்முகலிங்கம் தில்லை நடேசன்*
*மட்/ கிரான்குளம், வினாயகர் வித்தியாலயம்*

*3ம் இடம்:-* *கலையரசன் புவனீனா*
*மட்/ ஆரையம்பதி இ.கி.மி.பாடசாலை.*

கிராமிய நடனம்

*1ம் இடம்:-* *மட்/ ஆரையம்பதி மகா வித்தியாலயம்*

பங்குபற்றிய கலைஞர்கள்

*நடனம்:-* *சடாட்சரலிங்கம் லக்ஸ்மன்*
*கோணேஸ்வரலிங்கம் விஜித்தன்*
*கணேசன்மதீஸ்வரி*
*கோபாலப்பிள்ளை வினோஜினி*
*வடிவேல் புஸ்பலதா*
*சீனித்தம்பி சாளினி*
*திருமலிங்கம் பத்மலிங்கம்*
*புயாலப்பிள்ளை சஞ்சீவ்*
*ராஜ்ஜனனி*
*சரவணமுத்து லாவண்யா*
*இராஜேஸ்வரன் கோசலா*
*நடராஜா சாதனா*

*பாடல்:-* *சுந்தரலிங்கம் சதீஸ்வரன்*
*சச்சிதானந்தமூர்த்தி ஜீவிதா*

*டொல்கி:-* *கனகரெட்ணம் நவந்திரராஜா*

*தயாரிப்பு:-* *செல்வி.ரி.நல்லதம்பி*

*2ம் இடம்:-* *மட் / ஆரையம்பதி இ.கி.மி. பாடசாலை.*

பங்குபற்றிய கலைஞர்கள்

*நடனம்:-* *நிவேதிகா புவனேந்திரன்*
*தோகேந்தினி கோணலிங்கம்*
*கோகிலவதனி நல்லலெரெத்தினம்*
*பிறேம஌ா இரத்தினசிங்கம்*
*ஜீவிதா பாலசிங்கம்*
*மதுனப்பிரியா பூபாலரெத்தினம்*
*குமுதா பொன்னையா*
*புவனீனா கலையரசன்*

*பாடல் :-* *திருமதி.சா.குலசேகரம்பிள்ளை*
*திருமதி.வி.புலேந்திரன்*

*தபேலா :-* *திரு.ப.செந்தில்ராஜ்*

*தயாரிப்பு:-* *திருமதி.சு.கோபாலசுந்தரம்*

*3ம் இடம்:-* *மட் / வினாயகர் மகாவித்தியாலயம், கிரான்குளம்*

## பங்கு பற்றிய கலைஞர்கள்

*நடனம் :-பிரதீபா வேலுப்பிள்ளை* *தயானந்தினி சுந்தரம்*
*திருஷந்தினி சுந்தரலிங்கம்* *ரூபலெட்சுமி சுந்தரலிங்கம்*
*டிலானி அரசரெத்தினம்* *ரேணுகா முருகுப்பிள்ளை*
*கௌதினி கோபாலரெத்தினம்* *சாலினி சதாசிவம்*

*பாடல் :-* *கமலேஸ்வரி சித்திரவேல்*
*சுபாசினி சுப்பிரமணியம்*

*தயாரிப்பு:-* *திருமதி. எம். கிருபைமலர் லெனின்ராஜ்*

## கவிதைப் போட்டி

*1ம் இடம்:-* *திரு. கதிரவேலி அமரசிங்கம் (ஆரையூர் அமரன்)*
*ஆரையம்பதி -03*

*2ம் இடம்:-* *திரு. தங்கராசா மலர்செல்வன்*
*வேளாளர் வீதி,*
*ஆரையம்பதி - 03*

*3ம் இடம்:-* *திரு. க. மோகனதாஸ்*
*மட் / வினாயகர் வித்தியாலயம்*
*கிரான்குளம்*

## சிறுகதைப் போட்டி

*1ம் இடம்:-* *திரு. தங்கராசா மலர்செல்வன்*
*வேளாளர் வீதி,*
*ஆரையம்பதி - 03*

## நாடகப் போட்டி

*1ம் இடம்:-* *மட்/காங்கேயனோடை அல்-அக்ஸா மகாவித்தியாலயம்.*

*பங்குபற்றிய கலைஞர்கள்:-கே. எம். முஸ்தன்ஜீத்* *எம். ஏ. எம். பைறூஸ்*
*எம். ஐ. எம். ஹிஸ்மியாஸ்* *பி. எம். தாஜுல்முனிபர்*
*கே. எம். பஸீல்* *எம். எம். றூமி*
*எஸ். எல். றாபி* *எம். வி. ஜெம்ஸீத்*

*தயாரிப்பு :-* *செல்வி. கெ. அமுதேஸ்வரி.*

## கௌரவிக்கப்படும் கலைஞர்

*திருமதி. அமரசிங்கம் மனோன்மணி (கிராமிய வைத்தியம்)*



1937 சித்திரை 22ம் திகதி கிரான்குளத்தில் பிறந்த இவர் கடந்த 30 ஆண்டுகளாக (1968 தொடக்கம்) ஆயுர்வேத சித்த மருத்துவத்துறையில் விசேட பாம்புக்கடி வைத்தியராக சேவையாற்றி வருகின்றார்.

மட்டக்களப்பின் தென் புறமுள்ள அட்டப்பள்ளம், மருதமுனை, கல்முனை போன்ற இடங்கள் வரை இவரது சேவை நீடித்துள்ளது.

இவரது சேவைக் காலத்தில் கிட்டத்தட்ட 2000 த்துக்கும் மேற்பட்டவர்கள் இவரிடம் மருத்துவ சேவை பெற்றுள்ளனர்.

இலங்கை ஆயுர் வேத சித்தவைத்திய விசேட பாம்புக்கடி பதியப்பட்ட வைத்தியராகவுள்ள இவர் இன்று வரை சேவையாற்றி வருகின்றார்.

## கௌரவிக்கப்படும் கலைஞர்

*திரு. கணபதிப்பிள்ளை சூசைப்பிள்ளை (மேஸ்திரியார்)*



1924 ஆவணி 10ம் திகதி தாளங்குடாவில் பிறந்த இவர் கடந்த 43 வருடங்களுக்கு மேலாக (1955 தொடக்கம்) மேஸ்திரியாகவும், ஒப்பனைக் கலைஞராகவும் இருந்து வருகின்றார்.

இதுவரை இவர் ஒப்பனை செய்த வடமோடி கூத்துக்கள் 800, தென்மோடிக் கூத்துக்கள் 600, வசந்தன் கூத்து 100, நாடகங்கள் 20 (கலைஞரிடமிருந்து பெறப்பட்ட தகவலின்படி)


வடமோடி, தென்மோடி, வசந்தன் கூத்துக் கலைஞர்களுக்குத் தேவையான ஆடை, அணிகலன், முடி போன்றவற்றைச் செய்வதில் ஆரம்ப காலம் தொடக்கம் இன்றுவரை ஈடுபட்டு வருகின்றனர்.

தென்மோடிக் கூத்துக்குரிய கரப்புடுப்பு, பூ முடி மற்றும் ஆபரணங்கள் இன்னும் இவர் பாதுகாப்பிலுள்ளது.

உள்ளூர் மட்டத்தில் ஒப்பனைக்கான பரிசில்களையும், பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

# கௌரவிக்கப்படும் கலைஞர்

திரு. தம்பிப்பிள்ளை நல்லலிங்கம்
(நாட்டுக் கூத்து)



1938 ஆவணி 8ம் திகதி பிறந்த இவர் கடந்த 50 ஆண்டுகளாக நாட்டுக்கூத்துத் துறையில் ஈடுபட்டு வருகின்றார்.

தனது பன்னிரெண்டு வயதில் கூத்து ஆடல் கலைஞராகப் பிரவேசித்த இவர் இன்று கூத்துத் தயாரிப்பாளராகவுள்ளார்.

இவரால் பாடசாலை மட்டத்தில் தயாரிக்கப்பட்ட நாட்டுக்கூத்துக்கள் நான்கு தடவைகள் தங்கப் பதக்கம் பெற்றுள்ளன. பாசுபதம் (1981), சுபத்திரா கல்யாணம் (1982), பாதுகாபட்டாபிசேகம் (1990) சுபத்திரா கல்யாணம் (1992)

நாடக நடிகராகவும் உள்ள இவரது குரலில் காவடிப்பாடல் 1987ல் பாடப்பட்டு பதிவு செய்யப்பட்டு இன்னும் இப்பகுதி கோயில்களில் ஒலிபரப்பப்படுகின்றது.

கூத்து நடிகர், பாடகர், தயாரிப்பாளராக இன்னும் ஈடுபட்டு வருகின்றார்.

## கௌரவிக்கப்படும் கலைஞர்

*திரு. ஆறுமுகம் தங்கராசா*

*(சிறுகதை)*



13.12.1941ல் பிறந்த இவர் கடந்த முப்பத்திமூன்று வருடங்களாக சிறுகதை, கட்டுரை, நாடகம், கவிதை துறைகளில் ஈடுபட்டுவரும் இவரது சிறப்புத்துறை சிறுகதையே.

இதுவரை இவரது படைப்புக்கள் தினகரன், வீரகேசரி, சிந்தாமணி, மித்திரன், கலைச்செல்வி, சுதந்திரன், சுடர் போன்றவற்றிலும் இராணி (இந்தியா), கல்கி (இந்தியா) சிங்கப்பூர் முரசு (சிங்கப்பூர்) மல்லிகை போன்ற பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளியாகியுள்ளன.

தேசிய மட்டத்திலும் இடைக்கிடை வெளிநாட்டு நிறுவனங்கள் நடாத்திய போட்டிகளிலும் கலந்து கொண்டு பரிசில்களைப் பெற்ற இவர் இன்றுவரை தொடர்ந்து எழுதிக் கொண்டிருப்பவர்.

## 1997இல் எம்மால் முடிந்தவை

★ 05,06 சித்திரை
பிரதேச கைப்பணிக்கண்காட்சியும் விற்பனையும்

★ 11. வைகாசி
பிரதேச விளையாட்டு விழா

★ 15 வைகாசி
விவசாய முயற்சிகளின் விரிவாக்கத்துக்கான பயிற்சிக் கருத்தரங்கு

★ 17 வைகாசி
சர்வதேச பூமி பாதுகாப்புத் தினம்


★ 05 ஆனி
உலக சூழல் தினம் ஓவியக்கண்காட்சி

★ 25, 26. ஆடி
பிரதேச சாகித்திய விழா
பண்பாட்டியல் கண்காட்சி
சிறப்பு மலர் வெளியீடு

★07, 08 ஆவணி
போசாக்கு பற்றிய அறிவை வளர்க்கும்
நிகழ்ச்சித்திட்டம் கருத்தரங்கு

★ 09 ஒக்டோபர்
சர்வதேச சிறுவர் தினம்/ சர்வதேச முதியோர் வாரம்
விழுதுகள் மலர் வெளியீடு


**சாகித்திய விழா சிறப்புற வாழ்த்துக்கூறும்**



# ரேயி மர அரிவு ஆலை

**பிரதான வீதி,**
**ஆரையம்பதி.**



# மட்டக்களப்பு சமூகத்தில் சடங்குக் கோயில்களின் முக்கியத்துவமும் சமஸ்கிருதமயமாதலும்

சு. யோகன்



மானிடவியலில் சடங்கு என்ற சொல் பரந்த பொருள்கொள்ளலுக்கு இடமளிக்கின்றது.

*"நன்கு ஸ்தாபிக்கப்பட்ட அல்லது மரபுவிதிகளை அடிப் படையாகக் கொண்ட நன்கு அவதானிக்கக் கூடிய நடத்தையாக விசேடமானதும், சமூகங்களினால் வெளிப்படுத்தப் படுவதுமான ஒரு விடயமே சடங்காகும்"*

என வரையறை செய்கிறது.

மட்டக்களப்பில் சாதாரண சொல்லாடலில் சடங்கு என்பது ஆகமம் சாரா கோயில்களில் வருடத்தில் ஒரு முறை கோயில் கதவு திறந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அத்தெய்வத்திற்கு மடைவைத்து பூசைசெய்து வழிபடுகின்ற கண்ணகியம்மன் சடங்கு, மாரியம்மன் சடங்கு, திரௌபதியம்மன் சடங்கு, வைரவர் சடங்கு, பேச்சியம்மன் சடங்கு, போன்றவை இவ் அர்த்தத்தில் குறிப்பிடப் படுபவையாகும்.

இந்த அடிப்படையில் மட்டக்களப்பிலுள்ள சடங்குக் கோயில்களை இரண்டாகப் பிரிக்கலாம்.

1. ஆண் தெய்வ சடங்குக் கோயில்கள்
2. பெண் தெய்வ சடங்குக் கோயில்கள்

ஆண் தெய்வ கோயில்களில் நடக்கும் சடங்குகள் பெரும்பாலும் கெட்ட பேய் பிசாசுகளை துரத்துவதற்காகவே செய்யப்படுகின்றது. இதனால் பேய்களினால் உண்டாகும் நோய் நொடிகள் தம்மை அணுகாது என்ற நம்பிக்கையுண்டு பெண் தெய்வ கோயில்களில் நடக்கும் சடங்குகள் வளம் வேண்டியும், நோய்நொடிகளை அகற்றவும் செய்யப்படுகின்றது.

அம்மனின் கும்பகுடத்திலுள்ள நீரை கோயிலை வளைத்து ஊற்றுவதும், ஊருக்குள் தெளிப்பதும், வயல் வெளிகளில் தெளிப்பதும் வளம் பெருக வேண்டும் எனும் அர்த்தத்தின் குறியீட்டு வெளிப்பாடாக உள்ளது.

"நீர் நிரம்பிய கும்பமானது நீர் வளத்தின் அடிப்படையான மழையின் குறியீடாகவும் அமைகிறது. வடமொழியில் பூரணகதா என்று குறிப்பிடப்படும் நீர்

நிரம்பிய கும்பம் கருப்பையின் குறியீடாகத் தாந்திரிகத்தில் கருதப்படுகிறது."
(சிவ சுப்பிரமணியம், ஆ. 1988. பக். 99)

தெய்வமேறி ஆடுபவர்கள் நோயாளர்களுக்கு வேப்ப இலை, கற்பூரம் என்பவற்றை உண்ணக் கொடுப்பதும், குளிர்த்திப் பானையிலிருந்து நீரை பக்தர்களுக்குத் தெளிப்பதும் நோயை அகற்றுகின்ற நடவடிக்கைகளேயாகும்.

இந்த அடிப்படையில் ஆண் தெய்வ சடங்குகளை விட பெண்தெய்வ சடங்குகள் அல்லது அம்மன் சடங்குகள் சமூக முக்கியத்துவம் பெற்றனவாய் விளங்குவதை அம்மன் சடங்குகாலங்களின் போது இங்கு கடைப்பிடிக்கும் இறுக்கமான சமூகக் கட்டுப்பாடுகள் சான்று பகர்கின்றன.

குழந்தை பிறந்து தீட்டு கழியாதவர்கள், மாதவிடாய் நிலையிலுள்ளவர்கள் சடங்கு முடியும்வரை அவ்வூரில் இருக்கக் கூடாது என்பதும், மச்சம், மாமிசம் தவிர்ப்பதுடன் பொரித்தல், வறுத்தல், இடித்தல், குடைபிடித்தல் போன்றனவும் சடங்கு காலம் முடியும் வரை மேற்கொள்ள முடியாத செயல்களாக கடைப்பிடிக்கப்படுகின்றது. அம்மனுக்கு இந்தளவு முக்கியத்துவம் ஏன் ஏற்படுகின்றது என்பது முக்கியமான ஒரு வினாவாகும். ஏனெனில்

1. அம்மனை அம்மாவாக நோக்குகின்ற நிலையிங்குண்டு. பாசம், பரிவு, இரக்கம் நிறைந்த சக்தி வாய்ந்த தாயாக அவளை அணுகுகின்றனர். இதனால் சடங்கு நடக்கும் ஊரில் விசேசம் என்றால் அது அம்மனுக்காகவே இருக்க வேண்டும் என நம்புகின்றனர்.

2. பக்தர்களுக்கும் தெய்வத்துக்குமிடையிலான தொடர்பு மிகவும் நெருங்கியதாகும். இங்கு ஆகமக் கோயில்களில் இருப்பது போன்று பக்தர்களுக்கும் தெய்வத்துக் குமிடையில் தூதனாக குருக்கள் கிடையாது. அம்மனுக்கு ஆடுபவர் அம்மனுடன் தொடர்பு கொள்வதை நினைத்து அவர் ஆற்றலைப் பெற்று அம்மனாகவே அவர் மாறிவிடுகின்றார். (தோற்ற ரீதியாக நம்பவைப்பதற்கு அம்மனுக்கு ஆடுபவர் (பிரதானமான தெய்வம்) ஆணாக இருந்த போதும் தன்னை ஒரு பெண்ணாகவே அலங்கரித்திருப்பார். பக்தர்கள் தங்கள் குறைகளை, தேவைகளை நேரடியாக அம்மனிடமே முறையிட்டுக் கொள்ள முடிகிறது. கடவுள் என்ற முறை கூட இங்கு இல்லை. தாய் பிள்ளை உறவே இங்கு பேசப்படுகின்றது. உதாரணமாக,
அம்மன்:- "மகளே(ன) வருடா வருடம் தயாருக்கு மடைப்பெட்டி குடுத்தா உனது குறைகள் தீரும்" இங்கு அம்மனுக்குஆடுபவர் அன்றி அம்மனே தன்னுடன் பேசுவதால் பக்தர்களுக்கு மிகப்பெரிய உள ஆறுதல் கிடைக்கின்றது.

3. ஆண்டில் ஒருமுறைதான் இந்த உறவாடல் சந்தர்ப்பம் கிடைப்பதால் இவ் உறவின் வீச்செல்லை மிக உயர்ந்ததாகும்.

4. வாழ்வின் எதிர்காலம் எப்படியிருக்கும், தமது ஊருக்கு என்ன நடக்கும் என பயந்து வாழ்கின்ற நிலையில் அம்மன் வருடா வருடம் ஊர் காவல் பண்ணுவதால் எதுவுமே நடக்காது என்ற ஓர் நம்பிக்கையை மக்களிடம் ஏற்படுத்துகின்றது. வெல்லாவெளி மாரியம்மன் 2ம் நாள் சடங்கின் போது அம்மன் கும்பமுடன் ஆடிச் சென்று ஊர் நான்கு மூலைகளிலும் தேங்காய் வெட்டி காவல் பண்ணிவிட்டே கோயிலுக்குத் திரும்பும்.

5. பல்வேறுவிதமான உடல், உள நோய்களுக்கு அம்மன் மருந்து கொடுத்தால் சுகமாகும் என்ற நம்பிக்கையுண்டு. அத்துடன் அம்மனின் குளிர்த்தி நீர் தங்களில் பட்டாலும் நோய் நொடிகள் அணுகா எனவும் நம்புகின்றனர். வெல்லாவெளி மாரியம்மன் கோயிலில் 2ம் நாளிலிருந்து 7ம் நாள் சடங்குவரை மருந்து வாங்கி உண்பெதற்கென்றே பல பக்தர்கள் அங்கு தங்குவர்.

மேற்குறிப்பிட்ட காரணங்கள் எங்களுடைய மக்களுக்குக் குறிப்பாக பெண்களுக்கு அவசியமான தேவைப்பாடுகளாக இருக்கின்றது. சாதாரண தமிழ் சூழலில் பெண்கள் ஒரு பண்பாட்டு ரீதியான ஒடுக்குதலுக்கு உள்ளாகிவந்த நிலையில் இன்று அதற்கும் மேலாக யுத்த சூழல் மிக மோசமாக அவர்களை பாதிக்கின்றது. திடீர் இறப்புக்கள், அங்கவீனமாக்கப்படுதல், பாலியல் வல்லுறவுக்குள்ளாதல், நோய்வாய்ப்படுதல், சொத்திழப்புக்கள், பழிவாங்கப்படுதல், அடங்கிவாழ்தல், எதிர்பார்க்கைகள் நிறைவேறாமை போன்றன இவர்களின் உளவியலை மிகுதியாகப் பாதிக்கின்றது. எனது கடந்த மூன்று வருட அவதானிப்பின்படி வெல்லாவெளி மாரியம்மன் கோயிலுக்கு நோயாளிகளாக வருபவர்களில் 90% மானோர் பெண்களாவர். இவர்கள் 13-40 வயதுக்கு உட்பட்டவர்களேயாவர். இவர்களுடைய நோய் அறிகுறிகளாக சித்த சுயாதீனமற்ற நிலையிலுள்ளவர்கள், பிறழ்வான நடத்தையுடையவர்கள், அடிக்கடி மயங்கி விழுபவர்கள், தீராத செஞ்சுவலியில் உள்ளவர்கள், திடீரென வாய் பேச முடியாமல் போனவர்கள், என அடையாளம் காணமுடிகிறது.

இவற்றைவிட தெய்வமாடுபவர்களில் 75% மானோர் பெண்கள்ாவர் இவர்கள் 30க்கு மேற்பட்ட வயதையுடையவர்களாவர். பெரும்பாலும் திருமணம் செய்திருப்பர். இவர்கள் ஆடுவதானாலும், கத்துவதானாலும், ஒரு வகையான உணர்வு கடந்த பரவச நிலைக்கு

உள்ளாவதினாலும் முன்பு குறிப்பிட்டவர்களிடம் காணப்படும் நோய்கள் இவர்களிடம் காணப்படுவதில்லை. இவர்களுடைய ஆட்டத்தினாலும், கத்துதலினாலும் ஒரு உள ஆறுதலை அடைகிறார்கள் எனலாம்.

எனவே மட்டக்களப்பு சமூகத்தில் பெண் தெய்வ சடங்குக் கோயில்கள் ஒரு முக்கியமான சமூகமயமாக்கல் நிறுவனமாக விளங்குகின்றது எனலாம்.

இந்தளவு முக்கியத்துவமும் பெறுமதியும் மக்களிடம் இருந்தும் கூட இக்கோயில்கள் சமஸ்கிருதமயமாக்கலை நோக்கி நகர்வதையும் நாம் கவனித்தாக வேண்டும்.

"இந்திய சூழலில் மேனிலைப்பட்ட அசைவியக்கத்திற்கு ஆளாகும் ஒரு குடும்பம் அன்றேல் குழுமம் தமது நடைமுறைகளைப் படிப்படியாக உயர் இந்துமத நெறியில் கூறப்படுகின்ற, அதவாது சமஸ்கிருத இலக்கியங்களில் (எழுத்துக்களில்) உள்ளது என நம்பப்படுகின்ற முறைமையில் அமைத்துக் கொள்கின்றது." இப்படிச் செய்கின்ற பொழுது தாம் இதுவரை கடைப்பிடித்து வந்தனவற்றைச் சமஸ்கிருத நிலைப்படுத்தி அல்லது சமஸ்கிருத மயப்படுத்தி அவற்றையும் உயர் மரபுக்குரியன போன்று போற்றுதல் மரபாகும்.
(மேற்கோள். சிவதம்பி. கா. 1993. பக். 30)

இங்கு உயர்மரபாகக் காட்டப்படுவது அதிகார பேணுகையின் ஒரு வடிவமாகும்.

மேலாண்மை சமூகத்தின் அதிகாரம் கேள்விக்குட்படுத்தப்படும் போதெல்லாம் அது மக்கள் சார்ந்த விடயங்களை தரமற்றது, அநாகரீகம், மூடநம்பிக்கை என கட்டமைத்து தாக்கியழிக்கின்றது. தனது மேலாண்மையை உறுதிசெய்ய உதவக் கூடிய வேறுசில அம்சங்களைப் பாதுகாக்கின்றது.

"குறிப்பிட்ட சமூகத்தின் மேலாண்மைக்குழு தனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்தி அதனை இயல்பான ஏற்புடமையுள்ள ஒன்றாக ஆக்குவதற்குப் பண்பாட்டின் பல்வேறு அம்சங்களைப் பயன்படுத்தும். பாடசாலைகள், ஆலயங்கள், புதினப்பத்திரிகைகள், காட்சிகள் எனப் பல இப்பணிக்குப் பயன்படும்"
(சிவத்தம்பி. கா. 1993. பக்-23)

கோயில்கள் சமஸ்கிருதமயமாக்கலுக்குள் செல்லச் செல்ல சமூக அதிகாரப் படிநிலை முறைமை கூடிக் கொண்டே செல்ல வாய்ப்புண்டு. யாழ்ப்பாணத்தில் நாவலரின் சைவத் தொண்டு அச்சமூக அதிகார படிநிலை முறைமையினை இறுக்கமாக்கியது. மட்டக்களப்பு சமூகம் சடங்கு முறையினைக் கொண்டிருந்ததால் அதிகாரப் படிநிலை முறைமை நெகிழ்வானதாகக் காணப்பட்டது. இதனால் மட்டக்களப்பில் சாதிகள் பல இருந்தும் யாழ்ப்பாணத்தைப் போன்ற ஒரு சாதிப் போராட்டம் இங்கு ஆரம்பிக்கவில்லை.

மட்டக்களப்பிலும் எங்கெல்லாம் அம்மன் சடங்குகள் விடுபட்டு பிள்ளையார், முருகன் ஆலயங்கள் எழுச்சி பெற்றதோ அங்கெல்லாம் சாதி முரண்பாடுகள் கூர்மையடைந்திருப்பதைக் காண்கின்றோம்.

எடுத்துக் காட்டாக களுதாவளையில் பறையர் முக்குவர் சண்டையும், சித்தாண்டியில் நாவிதர் வெள்ளாளர் சண்டையும் இன்று முனைப்புப் பெற்றவையாக இருக்கின்றது. இதுபோல் எங்கும் உருவாக்கும் ஒரு காரணியே சமஸ்கிருதமயமாக்கமாகும். அம்மன் கோயில்கள் பின்வரும் முறையில் சமஸ்கிருத மயமாக்கலுக்குட்படுகின்றன.

1. ஆண்டுக்கொருதரம் கதவு திறந்து சடங்கு செய்வதை நிறுத்தி தினப் பூசையாக்குதல்.

2. பூசாரி பூசகர் நிலையிலிருந்து மாற்றப்பட்டு சமஸ்கிருதம் படித்த குருக்கள் சமஸ்கிருதத்தில் பூசை செய்தல்.

3. மடைவைத்துத் தொடங்கும் சடங்குக்குப் பதிலாக ஓமம் வளர்த்து யாகம் செய்து சடங்கு தொடங்குதல்.

4. கோயில்களில் சுவாமி வீதி உலாவருதல்.

5. பிள்ளையார், விஷ்னு, சிவன் கோயில்களை அம்மன் கோயில் வீதிகளில் பெரிதாக அமைத்தல்.

என்ற முறையில் இந்த மாற்றம் நிகழ்ந்து கொண்டுவருவதை அவதானிக்க முடிகின்றது.

எனவே எமது சுயத்தை அழிக்கின்ற அதிகாரமையப்படுத்தப்பட்ட சிந்தனைமுறைகள் பல்வேறுபட்ட அம்சங்களால் எம்மைச் சுற்றிவளைக்கின்ற சூழ்நிலையில் நாம் அவ்வாறான அம்சங்களுக்குள்ளால் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்துவத்தை / மேலாண்மையைக் கட்டவிழ்புச் செய்து அவற்றின் ஆபத்துக்களை உணர்வதுடன் எமது நடைமுறைகளை விமர்சனரீதியாக விளங்கிக் கொள்வதும் முக்கிய மானதாகும்.

---


உசாத்துணை நூல்கள்.

1. சிவத்தம்பி காத்திகேசு-யாழ்ப்பாண சமூத்தை விளங்கிக் கொள்ளல். கொழும்பு, 1993.

2. சிவசுப்பிரமணியன் .ஆ. மந்திரம் சடங்குகள். சென்னை. 1988.

# ஊரும் பெயரும்






மண்முனைப்பற்று பிரதேசம் தொன்மை வாய்ந்தது. கி.பி 312ம் ஆண்டுக்காலப் பகுதியில் தந்த புரத்திலிருந்து (இந்தியா) புத்த தந்தத்தை பாதுகாப்பாககொண்டு வந்து இலங்கை சேர்ப்பித்த குகசேன மன்னனின் மகள் உலகநாச்சிக்குச் சிற்றரசனான குணசிங்கன் அவள் விருப்பப்படி நன்கொடையாக வழங்கிய பிரதேசமே மண்முனைப்பற்று பிரதேசமாகும்.

இன்று இப்பிரதேசத்தை மையமாக வைத்தே ஏனைய பிரதேசங்கள் குறிப்பிடப்படுகின்றன. மண்முனை வடக்கு, மண்முனைதெற்கு மண்முனை மேற்கு............என. 21.5.சதுர கி.லோ மீற்றர் பரப்பளவைக்கொண்ட இப்பிரதேச மொத்தசனத்தொகை 25,667 நபர்களாகும்(1998 நடுப்பகுதி) ஆண்கள் 12,525(48.8%) பெண்கள் 13,142 (51.2%) இனரீதியாக தமிழர் 5356 குடும்பங்கள் (80%) முஸ்லீம் 1341 குடும்பங்கள் (20%) மத ரீதியாக இந்துக்கள் 5086 குடும்பங்கள் (76%) இஸ்லாமியர்கள் 1341 குடும்பங்கள் (20%) கிறிஸ்தவர்கள் 270 குடும்பங்கள் (4%) ஆக காணப்படுகின்றது.

இப்போதைய நிர்வாகப்பிரிவுகளாக இருபத்தேழுகிராம உத்தியோகத்தர் பிரிவுகள் காணப்படுகிறது. இதில் பல சிறு கிராமங்கள் உட்பிரிவாக இருப்பினும் தற்போதைய வாழ்நிலையைக்கருத்திற் கொண்டு பூரபு வழிக்கிராமங்களாக பின்வருவனவற்றைக் கொள்ளல் தகும்.

1) ஆரைப்பற்றை
2) காங்கேயனோடை
3) வேடர் குடியிருப்பு
4) புதுக்குடியிருப்பு
5) கிரான்குளம்
6) கோயில் குளம்
7) ஒல்லிக்குளம்
8) தாளங்குடா
9) பாலமுனை
10) மண்முனை
11) மாவிலங்கற்துறை

இக்கிராமங்களுக்கு வழக்கிலுள்ள பெயர்கள் ஏன் சூட்டப்பட்டன என்பது சுருக்கமாகத் தரப்படுகிறது.

## ஆரைப்பற்றை

நீர் ஓடைகளை 'ஆரை' என அழைப்பதுண்டு இக்கிராமத்தில் மட்டக்களப்பு வாவியுடன் கலக்கும் ஓடைகள் மலிந்து கிடப்பதாலும் அதே வேளை இவ்வோடைகளின் சாரலில் ஆரைச்செடி நிறைந்திருந்ததாலும் இக்கிராமம் ஆரைப்பற்றை என அழைக்கப்பட்டது. தற்போது ஆரையம்பதி என பெயர்

மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தற்போது இக்கிராமம் பதினொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

## காங்கேயனோடை

மண்முனைப்பிரதேசம் ஆரம்பத்தில் காத்தான், பாலன், காங்கேயன் எனும் வேடர்கள் ஆட்சி செய்து வந்தார்கள். அவர்களது பெயர் கொண்டே இப்பிரதேசங்கள் அழைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. காங்கேயன் வாழ்ந்த பகுதியே காங்கேயனோடை எனப்படுகிறது. சேனைப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட காங்கேயன் பெரியகுளத்து ஓடை, குந்தியன் ஓடை, பிரதான ஓடை எனும் ஓடைகளைப் பராமரித்து வடிகால் அமைப்பினை இக்கிராமத்தினூடாக செய்து விவசாயத்தையும், மீன்பிடியையும் ஊக்குவித்தல், இவ்காலத்தில் இக்கிராமம் செழிப்புற்றிருந்ததெனவும் மக்கள் மத்தியில் பிரபல்யமான காங்கேயனது பெயரைக்குறித்தே காங்கேயனோடை உருவானது எனப்படுகிறது. தற்போது இக்கிராமம் இரண்டு கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

## வேடர் குடியிருப்பு

உலகநாச்சி மண்முனையில் வசித்த காலப்பகுதியில் காங்கேயனோடை பாலமுனை கிராமங்களில் வசித்துவந்தவர்கள் குடியேறிய இடமே வேடர் குடியிருப்பு என அழைக்கப்பட்டது.

## புதுக்குடியிருப்பு

உலகநாச்சி மண்முனையை ஆண்ட காலப்பகுதியில் அப்பகுதியிலிருந்து ஒரு பகுதியினர் இன்னோர் பகுதியில் புதிதாகக்குடியேறினர். இவ்வாறு புதிதாகக் குடியேறிய காரணத்தினாலேயே புதுக்குடியிருப்பு என அழைக்கப்பட்டது. தற்போது இக்கிராமங்கள் மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகளாகப்பிரிக்கப் பட்டுள்ளது.

## கிரான்குளம்

மண்முனைப்பிரதேசத்தில் குளங்கள் அதிகளவில் உள்ள கிராமம் கிரான்குளம் இக்குளங்களில் கிரான் எனும் புல் அதிகமாகக் காணப்பட்டதனால் கிரான் குளம் என அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. தற்போது இக்கிராமம் நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

## கோயில் குளம்

உலகநாச்சியால் அமைக்கப்பட்ட கோயிலும் குளமும் ஒருங்கே அமைந்துள்ளபடியால் இப்பகுதி கோயில்குளம் எனப்படுகிறது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இக்கிராமம் பல தொன்மைகள் வெளிப்படுத்துவதுடன் ஆய்வுக்குட்படுத்த வேண்டியதாகவும் உள்ளது.

## ஒல்லிக்குளம்

கோயில் குளத்துக்கு அண்மையில் அமைந்துள்ள நீர்நிலைப் பிரதேசத்தில் நீர்நிலைகளிலே ஒல்லி' பூத்தாவரம் நிறைந்திருப்பதன் காரணமாக ஒல்லிக்குளம் என அழைக்கப்படுகிறது. இக்கிராமத்தினுள்ளே 'கீச்சான்' எனும் ஒரு பறவை நீர்நிலைகளில் நின்று காணப்படுவதால் கீச்சான் பள்ளம் எனும் காரணப்பெயர் கொண்ட பகுதியொன்றுமுள்ளது.

## தாளங்குடா

வேடர்குடியிருப்புக்கருகே குடா வடிவில் உள்ள இக்கிராமத்தில் தாளை மரம் நிறைந்து காணப்பட்டதன் காரணமாக தாளங்குடா என அழைக்கப்படுகிறது.

## பாலமுனை

உலக நாச்சி மண்முனையை ஆண்ட காலப் பகுதியில் பாலன் எனும் வேடன் இக்கிராமத்தில் தலைவனாக விருந்தான் மீன்பிடி பிரதான தொழிலா கவிருந்தது அங்கு குடியேறியவர்களால் தலைவனாகமர்த் தப்பட்டார். இவனது பெயரைக் கொண்டே பாலன்முனை என அழைக்கப்பட்டு பாலமுனையாயிற்று எனக் கொள்ளப்படுகிறது.

## மண்முனை

மணமிகுந்த பிரதேசமாகவும் நீரால் சூழப்பட்ட முனையாகவும் அமந்திருந்ததனால் இக்கிராமம் மண்முனை என அழைக்கப்படலாயிற்று. உலகநாச்சி இப்பகுதியை ஆண்ட காலப்பகுதியில் மண்முனையிலேயே தன் வசிப்பிடத்தை அமைத்ததாக நம்பப்படுகிறது.

## மாவிலங்கத்துறை

இயற்கை துறைமுக வசதி கொண்ட இப்பகுதியில் கரையோரத்தில் மாவிலங்க மரம் நிறைந்து காணப்பட்ட காரணத்தால் இப்பகுதி மாவிலங்கத்துறை என அழைக்கப்படலாயிற்று.


**உதவியவை**

1. *மட்டக்களப்பு மான்மியம்*
2. *மண்முனைப்பிரதேச சாகித்ய விழா சிறப்பு மலர் - 1997*
3. *புலரி' மட்/புதுக்குடியிருப்பு கண்ணகை வித்தியாலய வெளியீடு - 1996*
4. *ஆரையம்பதி ஸ்ரீ கந்தசாமி கோயில் வரவு செலவு அறிக்கை - 1980*
5. *பெரியோர்கள் செவிவழிச்செய்தி*
6. *அவ்வப்போது வெளிவந்த பத்திரிகை அறிக்கைகள்*

## விழா ஒன்றின் நிறைவில் இவர்கள்

*1997இல் நடந்தேறிய கலைவிழா தந்த பெருக்கத்தில்*
*1998இல் மீண்டும் ஒரு சந்திப்பைக் கண்டு தடம்பதிக்க விளையும்*
*மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தின் சாகித்திய விழா*
*விழா நிகழ்வில்*
*என்றும் துணைநின்று வழிகாட்டும்,*
*மட்டக்களப்பு மாவட்டச்செயலாளரும்*
*அரசஅதிபருமான திரு.அ.கி.பத்மநாதன் அவர்கள்,*
*தலைமையேற்று விழா நடத்தும் பிரதேச செயலாளர்*
*திரு.மா.உ.தயகுமார் அவர்கள்*
*"படி" யேற்றி துணிவூட்டி நெறிகாட்டி இசைவாக்கும்*
*துணைப்பிரதேச செயலாளர் திரு.வெ.தவராஜா அவர்கள்*
*ஆக அனைத்து நிகழ்சிகளையும் அரங்காக்கிய*
*அலுவலக உத்தியோகத்தர்களுக்கும்,*
*துணைநிலைகளிலிருந்து செயலகத்தின் கருவிகளான*
*பிரதேச கல்வித்திணைக்களம்*
*பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு.எஸ்.இராஜநாயகம் அவர்கள்*
*அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்,*
*கலைஞர்கள் குழுக்கள், தயாரிப்பாளர்கள், நடுவர்கள்*
*பிரதேச செயலகத்தின்*
*கலாசாரப்பேரவை உறுப்பினர்கள், பதவிநிலை உத்தியோகத்தர்கள்,*
*கிராம உத்தியோகத்தர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள்,*
*அலுவலக உள்ளக, வெளிக்கள உத்தியோகத்தர்கள்,*
*சிறு கைத்தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள், மற்றும்*
*பிரதேசம் வாழ் அனைத்து பொதுமக்களும்*
*நலனோன்பு நிறுவனங்களாயிருந்து நிதியளித்து சேவை செய்யும்*
*பிரதேச கிராம உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், வர்த்தகர்கள்*
*பிரதேச செயலக நலன்புரிச்சங்கம்*
*ஆரையம்பதி, புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்*
*கிராம முன்னேற்றச் சங்கங்கள் அரச சார்பற்ற நிறுவனங்களாயிருந்து*
*பணியாற்றும் சரீரம் ஸ்ரீலங்கா முதலிய நிறுவனங்கள்,*
*என்று தொடரும் நிலையில்*
*விழா சிறப்புற நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும்*
*பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், கலைஞர்கள்*
*பொதுமக்கள்,*
*ஏற்பாட்டுக்குதவிய உத்தியோகத்தர்கள்,*
*பார்வையாளர்கள்*
*இம்மலர் வெளிவரத்துணைநிற்கும்*
*எழுத்தாளர்கள், நண்பர்கள், விளம்பரங்கள் உதவியோர்*
*அட்டைப்பட வடிவமைப்புச் செய்த "மனோ"*
*கணனிப்பதிவிட்ட கொம்ஷெல்,*
*என்று தொடரும் சிறப்புப்பணிகளில்*
*உதவிய அனைத்து கலை இலக்கிய நிருவாக*
*நெஞ்சங்களுக்கும்*
*மனவுவந்த நன்றிகள் கூறி மீண்டும் ஒரு நிகழ்வில் 1999ல்*
*சந்திக்கத்தொடரும்*

*காசுபதி நடராஜா செயலாளர், பிரதேச செயலக கலாசாரப்பேரவை*
*பிரதேச செயலகம் மண்முனைப்பற்று.*

**விழாச்சிறப்புற்று மலர் மலர வாழ்த்துகிறது**

மண்முனைப்பற்று
பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

கூட்டுறவே நாட்டுயர்வு

*சங்கத்தின் சேவைகள்*

கூட்டுறவு வர்த்தக நிலையம்
எரிபொருள் விற்பனைச் சேவை
போட்டோப் பிரதி, தபால் முத்திரைச் சேவை
போக்குவரத்துச் சேவை
கிராமிய வங்கிச் சேவை

## பிரதான வீதி,
## ஆரையம்பதி

**விழாச்சிறப்புற்று மலர் மலர வாழ்த்துகிறது**



## பிரதேச மதுபான விற்பனை நிலையம்

**பிரதான வீதி, புதுக் குடியிருப்பு.**



Type Settings : Compsel Laser Settings, Batticaloa, Tel. No. 22475
Printing by Athavan Printers, Arasady, Batticaloa.